# வேளாண்மை


## தேயிலை

முந்திய ஆண்டில் சிறிதளவு பின்னடைவினைக் கொண்டிருந்த தேயிலை உற்பத்தி 1987 இல் 1 சதவீதத்தினுல் சிறிதளவு உயர்வடைந்து 2,133 இலட்சம் கிலோக்கிறும்களாக விளங்கியது. கடுமையான வரட்சிநிலை, குறைவான வள மாக்கிப் பயன்பாடு என்பன காரணமாக உற்பத்தி ஆண்டின் முதல் காற்பகுதி யில் கணிசமாக வீழ்ச்சியடைந்தபோதிலும் இது ஏற்பட்டது. வேறுபட்ட உயர வகைகளின் உற்பத்திச் செயலாற்றம் மிகவும் வேறுபட்டமைந்தது. மத்திய நிலத் தேயிலை உற்பத்தி சிறிதளவு அதிகரித்தவேளையில் தாழ்நிலத் தேயிலை உற்பத்தி 7 சதவீதத்தினுல் அதிகரித்து இதுவரை பதிவு செய்யப்பட்டதில் மிக உயர்ந்த மட்டமான 864 இலட்சம் கிலோக்கிறும்களை அடைந்தது. மொத்த உற்பத்தியில் தாழ்நிலத் தேயிலை 1986 இன் 38 சதவீதப் பங்குடன் ஒப்பிடுகையில் 41 சதவீதத்திற்கு வகை கூறியது. உற்பத்தியின் அதிகரித்துச் செல்லும் இப் போக்கிற்கு 1980 இன் முற்பகுதியில் முக்கியமாகச் சிறு உடைமையாளர்களினுல் தாழ்நிலப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட புதிய பெருந்தோட்டச் செய்கை காரணமாகும். மாருக உயர்நிலத் தேயிலையின் உற்பத்தி மூன்ருவது தொடர்ச்சி யான ஆண்டாகக் குறைவடைந்து 1987 இல் 5 சதவீதத்தினுல் 734 இலட்சம் கிலோக்கிறும்களுக்கு வீழ்ச்சியடைந்தது. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கிய மாக ஆண்டின் முற்பகுதியில் முக்கிய பயிர்ச்செய்கைப் பகுதிகளில் பெரும் பாலானவற்றில் நிலவிய வரண்ட நிலைமை காரணமாக ஏற்பட்டதாகும்.

1987 இல் 2,090 இலட்சம் கிலோக்கிறும்களாக மதிப்பிடப்பட்ட மரபு ரீதியான தேயிலையின் உற்பத்தி முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஒரு சதவீத அதிகரிப்பைக் காட்டியது. 1987 இல் வெட்டிக் கிழிக்கப்பட்டுச் சுருட்டப்பட்ட தேயிலையின் உற்பத்தியும் ஏறக்குறைய ஒரு சதவீதத்தினுல் 11 இலட்சம் கிலோக் கிறும்களுக்குச் சிறிதளவு அதிகரித்தவேளையில் லோபறி பதனிடல் தேயிலையின் உற்பத்தி 23 சதவீதத்தினுல் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்து 32 இலட் சம் கிலோக்கிறும்களாக விளங்கியது. லோபறி பதனிடல் தேயிலையின் வீழ்ச்சி ஓரளவிற்கு ஆண்டு முழுவதும் மரபு ரீதியான தேயிலைக்குக் கிடைத்த கவர்ச்சியான விலைகள் சில தொழிற்சாலைகளை மரபு ரீதியான தேயிலையின் உற்பத்தியிலேயே தொடர்ந்தும் கவனம் செலுத்தத் தூண்டியமையால் ஏற்பட்டதாகும்.

1987 இல் தேயிலை உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு முற்ருக அரசிற்குச் சொந்தமான பெருந்தோட்டங்களின் உற்பத்தி வீழ்ச்சியடைந்த வேளையில் தனி யார் துறையின் அதிகரித்த வெளியீடு காரணமாக ஏற்பட்டதாகும். மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையினதும், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களினதும் அவர்களது சொந்தப் பெருந்தோட்டங்களிலிருந்தான கொழுந்துகளுடன் ஒன்று சேர்ந்த தேயிலை உற்பத்தி 1987 இல் 3 சதவீதத்தினுல் 1.232 இலட்சம் கிலோக்கிறும்களுக்கு வீழ்ச்சியடைந்து மொத்தத் தேயிலை உற்பத்தியில் 1986 இன் 60 சதவீதப் பங்குடன் ஒப்பிடுகையில் 58 சதவீதத்திற்கு வகை கூறியது. வாங்கப்பட்ட கொழுந்திலிருந்து தயாரிக்கப்பட்ட தேயிலை நீங்க லான மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் தேயிலை உற்பத்தி 2 சத வீதத்தினுல் வீழ்ச்சியடைந்து 677 இலட்சம் கிலோக்கிறும்களாக விளங்கிய வேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களின் உற்பத்தி 5 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்து 556 இலட்சம் கிலோக்கிறும்களாக விளங்கியது.

## முதன்மை வேளாண்மைப் பயிர்களின் உற்பத்தி




இலங்கை மத்திய வங்கி

இவ்வீழ்ச்சி பெரும்பாலும் ஆண்டின் முற்பகுதியில் நிலவிய வரட்சி நிலைமை களினாலும் நடுத்தர முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் மீள்நடுகை நோக்கத்திற் காகப் பெருமளவு இடத்தில் செடிகள் பிடுங்கப்பட்டமையினாலும் ஏற்பட்டதாகும். வாங்கப்பட்ட கொழுந்திலிருந்து இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை 1987 இல் 3 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்து 121 இலட்சம் கிலோக்கிரும்களாக விளங்கியதுடன் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் மொத்த உற்பத்தியில் 18 சதவீதத்திற்கு வகை கூறியது. மாறாக, மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையினால் வாங்கப்பட்ட கொழுந்திலிருந்து, உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை 1987 இல் 4 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்து 50 இலட்சம் கிலோக்கிரும் களாக விளங்கி மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் மொத்த உற்பத்தி யில் 7 சதவீதத்திற்கு வகை கூறியது.

தனியார்துறையின் தேயிலை உற்பத்தி 1987 இல் 10 ச வீதத்தினால் அதிகரித்து 1981 இலிருந்து அவதானிக்கப்பட்ட போக்கினைத் தொடர்ந்தும் கொண்டிருந்தது. தனியார்துறையினால் உற்பத்தி செய்யப்பட்டு மக்கள் பெருந் தோட்ட அபிவிருத்திச் சபைகளுக்கும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனத்திற்கும் சொந்தமான தொழிற்சாலைகளில் பதனிடப்பட்ட கொழுந்துத் தேயிலையைத் தனியார்துறையின் கீழ் உள்ளடக்குமிடத்து மொத்தத் தேயிலை உற்பத்தியில் இதன் பங்கு 1986 இன் 39 சதவீதத்திலிருந்து 1987 இல் 42 சத வீதத்திற்கு அதிகரித்தது.

தேயிலைத்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1987 இல் 6 சதவீதத்தால் அதிகரித்து 136,335 மெற்றிக் தொன்களாக விளங்கின. பெரும்பாலும் 1987 இன் பின் அரைப் பகுதியிலே ஏற்பட்ட அதிகரிப்பு முக்கியமாகச் சாதகமான வானிலை நிலைமைகளினாலும், சார்புரீதியில் சிறந்த தேயிலை விலைகளினாலும் ஏற் பட்டதாகும். எனினும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைகளினால் முகாமைப்படுத்தப்பட்ட தேயிலைத் தோட்டங்களின் வளமாக்கிப் பயன்பாடு 1987 இல் 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 39,709 மெற்றிக் தொன்களாக விளங்கிய வேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களின் தோட்டங்களின் பயன்பாடு 1986 இன் 34,595 மெற்றித் தொன்களிலிருந்து 11 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்து 1987 இல் 30,808 மெற்றிக் தொன்களாக விளங்கியது. எனினும் தனியாருக்குச் சொந்தமான தேயிலை நிலங் களின் வளமாக்கிப் பயன்பாடு 1987 இல் அதிகரித்துள்ளமையைக் கிடைக்கத்தக்க தாகவுள்ள தரவுகள் காட்டுகின்றன. ஏனைய உயர வகைகளில் ஏற்பட்டதனைப் போன்று தாழ்நிலப் பகுதிகளில் ஆண்டின் முதற்காற் பகுதியின் வரட்சி நிலை அவ்வளவு மோசமானதாக இருக்காமையினால் இவ்வதிகரிப்பில் பெரும்பகுதி தாழ்நிலப் பகுதியில் மட்டுமே ஏற்பட்டிருந்தது.

அட்டவணை 1.10

## தேயிலைத் துறையின் புள்ளி விபரங்கள் 1985—1987

| விடயம் | அலகு | 1985 | 1986 (அ) | 1987 (ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி ... | ப.இ.கி. கிறும்கள் | 214.1 | 211.3 | 213.3 |
| 1.1 உயர் நிலம் ... | ,, | 78.9 | 77.1 | 73.4 |
| 1.2 மத்திய நிலம் ... | ,, | 55.1 | 53.3 | 53.5 |
| 1.3 தாழ் நிலம் ... | ,, | 80.1 | 80.9 | 86.4 |
| 2. தேயிலை பயிரிடப்பட்ட பரப்பு ... | '000 எக்டேயர்கள் | 231 | 223 | 221 |
| 3. வளமாக்கி வழங்கல்கள் ... | '000 மெ. தொன்கள் | 149.9 | 128.8 | 136.3 |
| 4. மீளப் பயிரிடல் ... | எக்டேயர்கள் | 1,672 | 1,618 | 1,503 |
| 5. விலைகள் ... | | | | |
| 5.1 கொழும்பு தேறிய ... | ரூபா/கி. கி. | 35.39 | 30.28 | 38.06 |
| 5.2 ஏற்றுமதி க. எ. பெ. ... | ,, | 60.62 | 44.52 | 52.97 |
| 6. உற்பத்திக்கான செலவு ... | ,, | 35.00 | கி.கி. | கி.கி. |
| 7. ஏற்றுமதிகள் ... | ப. இ. கி. கி. | 198.0 | 207.8 | 201.1 |
| 8. ஏற்றுமதி வருவாய்கள் ... | ரூ. ப. இ. | 12,002.8 | 9,252.8 | 10,653.5 |
| 9. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (இ) ... | (சிஎஉ.ப. இ.) | (434) 5.6 | (281) 4.5 | (280) 5.5 |

மூலங்கள்: இலங்கைத் தேயிலைச் சபை,
தேசிய வளமாக்கிச் செயலகம்
இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு: எக்டேயர் ஒன்றுக்கான சராசரி விளைச்சலின் தரவு கிடைக்கவில்லை.
அ. திருத்தப்பட்டது.
ஆ. தற்காலிகமானவை.
இ. பயிரிடலும் பதனிடலும் மட்டும்.

நாடு பூராவுமான எக்டேயர் ஒன்றுக்கான சராசரி விளைச்சல் பற்றிய தகவல் கிடைக்கத்தக்கதாகவில்லை. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையினுல் முகாமைப்படுத்தப்படும் பெருந்தோட்டங்களின் சராசரி விளைச்சல் 1987 இல் 1 சதவீதத்தினுல் சிறிதளவு அதிகரித்து எக்டேயர் ஒன்றுக்கு 1,249 கிலோக் கிறும்களாக விளங்கிய வேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனங்களினுல் முகாமைப்படுத்தப்பட்டவற்றின் விளைச்சல் 2 சதவீதத்தினுல் சிறிதளவு வீழ்ச்சியடைந்து எக்டேயர் ஒன்றுக்கு 1,142 கிலோக்கிறும்களாக விளங்கியது. தனியார்துறையின் சராசரி விளைச்சல் பற்றிய தரவு கிடைக்கப் பெருதபோதிலும் முன்பு குறிப்பிடப்பட்டபடி தனியார்துறையின் தேயிலை பயிரிடும் நிலங்களின் உற்பத்தியில் ஏற்பட்ட 10 சதவீத அதிகரிப்பின் அடிப்படையில் தனியார்துறையின் தேயிலை நிலங்களின் சராசரி விளைச்சல் 1987 இல் அதிகரித்துள்ளதாக ஊகிப்பதில் தவறில்லை.

இவ்வாண்டில் தேயிலைப் பயிர்ச்செய்கையின்கீழ்ப் பதிவு செய்யப்பட்ட, மொத்த நிலப்பரப்பு தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக வீழ்ச்சியடைந்து 1 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்து 221,498 எக்டேயர்களாக விளங்கியது. நிலப்பரப்பின் முழு வீழ்ச்சிக்கும் அரசதுறை வகை கூறியது. 1987 இல் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைகளுக்கும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களுக்கும் சொந்தமான பெருந்தோட்டங்களில் தேயிலையின்கீழான நிலப்பரப்பு ஒவ்வொன்றும் 2 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்து முறையே 58,744 எக்டேயர்களாகவும், 54,370 எக்டேயர்களாகவும் விளங்கின. இவ்வீழ்ச்சி முக்கிய

மாக அவர்களது பெருந்தோட்டங்களின் சிலவற்றை முந்திய உடைமையாளருக்குக் கையளித்தமையினுலும் எல்லைத் தேயிலைக் காணிகளை வேறு பாவனைக்கு மாற்றியமையினுலும் ஏற்பட்டதாகும். தனியார்துறையில் தேயிலையின் கீழான நிலப்பரப்பு ஒரு சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. எனினும் இது அரச துறையின் நிலப்பரப்பில் ஏற்பட்ட வீழ்ச்சியினை ஈடுசெய்யப் போதுமானதாக இருக்கவில்லை. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பெருந்தோட்டங்களில் விளைச்சல்கள் தரும் நிலப்பரப்பின் அளவு 1986 இன் 55,858 எக்டேயர்களிலிருந்து 3 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்து 1987 இல் 54,156 எக்டேயர்களாக விளங்கியவேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பெருந்தோட்டங்களின் கீழான விளைச்சல் தரும் நிலப்பரப்பு 1986 இன் 49,760 எக்டேயர்களிலிருந்து 1987 இல் 48,663 எக்டேயர்களுக்கு 2 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது.

1987 இல் மீள்நடுகை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 1,503 எக்டேயர்களாகும். இது முந்திய ஆண்டில் மீள்நடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பினைவிட (1,618 எக்டேயர்கள்) 7 சதவீதம் குறைவானதாகும். மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பெருந்தோட்டங்களில் மீள்நடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பு 1986 இன் 553 எக்டேயர்களிலிருந்து 1987 இல் 493 எக்டேயர்களுக்கு 60 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தவேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களினுல் முகாமைப்படுத்தப்படும் பெருந்தோட்டங்களில் மீள்நடுகை செய்யப்பட்ட நிலப்பரப்பு 1986 இன் 602 எக்டேயர்களிலிருந்து 1987 இல் 661 எக்டேயர்களுக்கு 59 சதவீதத்தினுல் அதிகரித்தது. தேயிலைச் சிறு உடைமை அபிவிருத்தி மேலாண்மைச் சபையிலிருந்து கிடைக்கத்தக்கதாகவுள்ள தரவுகள் தனியார்துறையில் உதவுதொகை வழங்கப்பட்ட மீள்நடுகையின் கீழான நிலப்பரப்பு 1986 இன் 463 எக்டேயர்களிலிருந்து 1987 இல் 349 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியுற்றமையைக் காட்டுகின்றன. குறைவான செயலாற்றமானது ஓரளவிற்கு ஆண்டின் முற்பகுதியில் நிலவிய பாதகமான வானிலை நிலைமைகளின் விளைவாக ஏற்பட்டதாகும்.

1986 இல் இரு மடங்காக அதிகரித்த தேயிலையின் புதிய பயிரிடல் 1986 இன் 1,633 எக்டேயர்களிலிருந்து 12 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்து 1987 இல் 1,437 எக்டேயர்களாக விளங்கியது. முந்திய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மட்டங்களுடன் ஒப்பிடுகையில் தனியார்துறையின் புதிய பயிரிடல் 246 எக்டேயர்களினுல் வீழ்ச்சியடைந்தவேளையில் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனமும் ஒன்றுசேர்ந்து புதிய பயிரிடலில் 50 எக்டேயர் அதிகரிப்பினை அறிவித்தன. முந்திய ஆண்டின்போது நிலவிய சார்பு ரீதியில் குறைவான விலைகள் தனியார்துறையின் புதிய பயிரிடுகையின்மீது காலங்கடந்த பாதகமான தாக்கத்தைக் கொண்டிருந்தன.

இவ்வாண்டுக் காலத்தில் மீளப் பயிரிடல், புதிய பயிரிடல் உதவுதொகை வீதங்கள் மாற்றமின்றியிருந்தன. எனினும் தற்போதைய வீதங்கள் பயிரிடலின் மொத்தச் செலவில் ஒரு பகுதியை மட்டுமே ஈடுசெய்ய உதவியதாக இருந்தமையால் இவ்வுதவுதொகைகள் தனியார்துறையின் மீளப்பயிரிடல், புதுப்பயிரிடல் நடவடிக்கைகளைப் போதுமானளவிற்கு ஊக்குவிக்கத் தவறிவிட்டன. மீளப்பயிரிடலைப் பொறுத்தவரை உதவுதொகை வீதம் ஏற்பட்ட செலவில் ஏறத்தாள அரைப் பங்கை மட்டுமே ஈடுசெய்தது. புதிய பயிரிடலுக்கான பொருத்தமான கன்னி நிலங்கள் போதுமானதாக இல்லாமையைக் கருத்திற் கொள்கையில்

தேயிலை உற்பத்தியின் இலாபம் ஏற்கனவே பயிர்ச்செய்கையின்கீழ் உள்ள பரப்பின் உற்பத்தியாக்கத்தை அதிகரிப்பதிலேயே பெருமளவிற்குத் தங்கியிருக்கும். இந் நோக்கத்தின் பொருட்டு மீள்நடுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகப் பயிர்ச்செய்கையாளர்களுக்குப் பெருமளவு ஊக்குவிப்புக்களை வழங்குவதன் மூலம் நிலையானதும் முறைசார்ந்ததுமான மீள்நடுகையை உறுதிப்படுத்துவது மிக முக் கியமானதாகும்.

அரசதுறைப் பெருந்தோட்டத்துறையில் தயாரிக்கப்பட்ட ஒரு கிலோக்கிரும் தேயிலைக்கான கணிக்கப்பட்ட சராசரி உற்பத்திச் செலவு ரூ. 38.38 என மதிப் பிடப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டினைவிட ஏறத்தாள 5 சதவீதம் உயர் வானதாக இருந்தமைக்குக் கூலிச் செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் நாட்டின் குழப்ப நிலைமைகளின் விளைவாகத் தோன்றிய உயர்ந்த செலவுகள் என்பனவே முக்கிய காரணமாகும். மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் உற்பத்திச் செலவு கிலோக்கிருமொன்றுக்கு ரூ. 39.50 இற்கு 3 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் உற் பத்திச் செலவு கிலோக்கிருமொன்றுக்கு ரூ. 37.20 இற்கு 8 சதவீதத்தினால் உயர்வடைந்தது. கொழும்பு ஏலங்களின் சராசரி தேறிய விற்பனை விலை 1986 இன் கிலோக்கிருமிற்கு ரூ. 30.28 இலிருந்து 1987 இல் கிலோக்கிருமிற்கு ரூ. 38.06 இற்கு 26 சதவீதத்தினால் உயர்வடைந்தது. மக்கள் தோட்ட அபிவிருத் திச்சபையின் உற்பத்தியாளர் இலாபம் 1986 இன் கிலோக்கிருமிற்கு ரூ. 8.04 கொண்ட எதிர்க்கணிய இலாபத்திலிருந்து 1987 இல் கிலோக்கிருமிற்கு ரூ. 3.38 கொண்ட எதிர்க்கணிய இலாபத்திற்கு முன்னேற்றமடைந்தது. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியாளர் இலாபம் 1986 இன் கிலோக்கிருமிற்கு ரூ. 2.45 கொண்ட எதிர்க்கணியத்திலிருந்து 1987 இல் கிலோக்கிருமுக்கு ரூ. 1.07 கொண்ட நேர்க்கணிய இலாபத்திற்கு மாற்ற மடைந்தது.

தேயிலை சிறு உடமைகள் அபிவிருத்தி மேலாண்மைச் சபை தனியார்துறை தேயிலைப்பயிர்ச் செய்கையாளர்களுக்குத் தொடர்ந்தும் பல வழிகளில் உதவியது. உதவு தொகை நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் தேயிலை சிறு உடைமைகள் அபிவிருத்தி மேலாண்மைச் சபையின் முக்கிய தொழிற்பாடுகளில் ஒன்றாகும். அத்துடன் சிறு உடைமையாளர்களினால் உற்பத்தி செய்யப்பட்ட கொழுந்துத் தேயிலையைப் பதனிடுவதற்காகத் தேயிலை சிறு உடைமைகள் அபி விருத்தி மேலாண்மைச் சபை பல் தொழிற்சாலைகளைத் தொழிற்படுத்தியது. அத்தகைய தொழிற்சாலைகளின் எண்ணிக்கை முன்னைய ஆண்டினைப் போன்றே 1987 இலும் 12 ஆக இருந்தது.

ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் பொருட்டுத் தொகை வடிவிலான தேயிலை, உறைகளிலிடப்பட்ட தேயிலை, உடன் தேயிலை, கொழுந்து தேயிலை என்பனவற்றின் மீதான ஏற்றுமதித்தீர்வைகள் 1987 நவெம்பரில் கிலோக்கிருமிற்கு ரூ. 1.50 இனால் முறையே கிலோக்கிருமிற்கு ரூ. 3.50 இற்கும், ரூ. 2.00 இற்கும், ரூ. 8.50 இற்கும் ரூ. 350 இற்கும் குறைக்கப்பட்டவேளையில் தேயிலைப் பைகளின் மீதான ஏற்றுமதித் தீர்வை ஒழிக்கப்பட்டது. தரம் குறைந்த தேயிலையின் ஏற்று மதியைத் தடை செய்யும் பொருட்டு தேயிலைச் சபை கொழும்பு ஏலங்களில் விற்பனைக்கு விடப்படும் தேயிலைகளுக்கு ஆகக் குறைந்த தர நிர்ணயமொன்றை அறிமுகப்படுத்தியது. இவ்வழிமுறை விலைகளின் மீது சாதகமான தாக்கத்தைக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

இவ்வாண்டில் கொழும்பு ஏலங்களில் அனைத்துத் தேயிலைக்குமான சராசரி விலைகள் கிலோக்கிராமிற்கு ரூ. 34 இற்குக் கூடுதலாக இருந்தமையால் 1987 இல் தேயிலைகளின் சமநிலைப்படுத்தும் நிதியத்தினூடாகப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு உதவி எதுவும் வழங்கப்படவில்லை.

**இறப்பர்**

1987 இல் இறப்பர் உற்பத்தி 1,230 இலட்சம் கிலோக்கிராம்களாகத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டினைவிட 11 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. கடந்த இருபது ஆண்டுக் காலத்தில் பதிவு செய்யப்பட்ட உற்பத்தியில் இதுவே மிகக் குறைந்த மட்டமாகும். கடுமையான வரட்சி நிலைமைகள் காரணமாக ஆண்டின் முதல் காற் பகுதியில் வீழ்ச்சியுற்ற உற்பத்தி முக்கிய உற்பத்திப் பிரதேசங்களில் காணப்பட்ட பெரும் மழையின் காரணமாகப் பால் எடுத்தல் குறைவுற்றமையினைத் தொடர்ந்து ஆண்டின் மூன்றும் காற் பகுதியில் மேலும் வீழ்ச்சியுற்றது. மீள் நடுகை நடவடிக்கைகளுக்காகப் பெருமளவு நிலப்பரப்பில் மரங்கள் பிடுங்கப்பட்டமையும் இவ்வாண்டுக் காலத்தில் உற்பத்தியின் மீது பாதகமான விளைவைக் கொண்டிருந்தது.

உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி அரசதுறையிலும் தனியார்துறையிலும் சமமற்றுக் காணப்பட்டதுடன் பின்னையது 148 இலட்சம் கிலோக்கிராம்கள் கொண்ட மொத்த வீழ்ச்சியில் ஏறத்தாள 84 சதவீதத்திற்கு வகை கூறியது. முன்னைய ஆண்டின் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 1987 இல் தனியார்துறையின் உற்பத்தி 834 இலட்சம் கிலோக்கிராம்களாக மதிப்பிடப்பட்டு 13 சதவீதம் குறைவாக இருந்தது.

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் என்பனவற்றின் வாங்கப்பட்ட லேட்டெக்சில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட இறப்பர் நீங்கலான இணைந்த உற்பத்தி 1986 இன் 404 இலட்சம் கிலோக்கிராம்களிலிருந்து 1987 இல் 386 இலட்சம் கிலோக்கிராம்களுக்குக் குறைவடைந்து 18 இலட்சம் கிலோக்கிராம்களினால் அல்லது 4 சதவீதத்தினால் மட்டும் வீழ்ச்சியைக் காட்டியது. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் உற்பத்தி 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தவேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி 5 சதவீத வீழ்ச்சியைக் கொண்டிருந்தது. (வாங்கப்பட்ட லேட்டெக்சிலிருந்தான உற்பத்தி நீங்கலாக).

இறப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தரவுகளின்படி 1987 இல் எக்டேயர் ஒன்றிற்கான சராசரி விளைச்சல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 744 கிலோக்கிராம்களுக்கு 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. சராசரி விளைச்சலில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் 5 சதவீத வீழ்ச்சியையும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை 3 சதவீத வீழ்ச்சியையும் பதிவு செய்தன.

முன்னைய ஆண்டுகளைப்போன்றே இறப்பர் எல்லை நிலங்களைக் குறிப்பாகத் தேயிலைச் செய்கைக்கு மாற்றுதலும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இறப்பர் நிலங்களைத் துப்பரவு செய்தலும் 1987 இலும் தொடர்ந்தமை இறப்பரின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்புச் சிறிதளவில் குறைவடைந்தமைக் குக் காரணமாயிற்று. பாலெடுத்தலின் கீழ் உள்ள மொத்த நிலப்பரப்பு 1987 இல் ஒரு சதவீதத்தினால் 165,565 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியுற்றதுடன் இதுவே கடந்த அண்மைக் காலத்தில் பதிவு செய்யப்பட்ட மிகக் குறைந்த மட்டமாகும். பாலெடுத்தலின் கீழான பரப்பளவு குறைவடைந்து செல்லும் போக்கு 1980 ஆம் ஆண்டிலிருந்து காணப்படுகின்றது.

## அட்டவணை 1.11

## இறப்பர்த் துறையின் புள்ளி விபரங்கள் 1985–1987

| விடயம் | கூறு | 1985 | 1986(அ) | 1987(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி ... | ப. இ. கி. கி. | 137.5 | 137.8 | 123.0 |
| 2. பரப்பளவு | | | | |
| 2.1. பயிர்ச் செய்கைக்குட்பட்ட ... | '000 எக்டேயர்கள் | 205.5 | 205.2 | 205.1 |
| 2.2. பால் எடுக்கும் ... | ,, | 168.2 | 166.7 | 165.6 |
| 3. விளைச்சல் ... | கி. கி. /எக்டேயர் | 818 | 826 | 744 |
| 4. வளமாக்கி வழங்கல்கள் ... | '000மெ. தொன்கள் | 24.2 | 26.3 | 24.7 |
| 5. மீள்நடுகை ... | எக்டேயர்கள் | 6,694 | 5,911 | 5,512 |
| 6. விலைகள் ... | | | | |
| 6.1. ஏற்றுமதிகள் க. வ. பெ. ... | ரூ. / கி. கி | 21.34 | 23.83 | 27.63 |
| 6.2. கொழும்பு ஆர். எஸ். எஸ். 1 ... | ,, | 15.90 | 16.62 | 21.10 |
| 7. உற்பத்திச் செலவு (இ) ... | ,, | 10.50 | 10.93 | 11.37 |
| 8. ஏற்றுமதிகள் ... | ப. இ. கி. கி. | 120.2 | 110.0 | 106.0 |
| 9. உள்நாட்டு நுகர்வு ... | ,, | 15.1 | 16.4 | 18.0 |
| 10. ஏற்றுமதி வருவாய்கள் ... | ரூ. ப. இ. | 2,566.0 | 2,622.0 | 2,929.3 |
| | (சிஎஉ. ப. இ.) | (93) | (80) | (77.7) |
| 11. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (ஈ) ... | | 1.4 | 1.4 | 1.4 |

மூலங்கள்: இறப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களம்.
தேசிய வளமாக்கிச் செயலகம்.
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) அரசதுறைத் தோட்டங்கள், தனியார்துறைத் தோட்டங்கள், சிறு உடைமையாளர்கள் ஆகியவற்றின் உற்பத்திச் செலவின் நிறையேற்றப்பட்ட சராசரி.
(ஈ) பயிர் வளர்த்தலிலும், பதனிடலிலும் மட்டும்.

1987 இல் இறப்பர்த்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 24,706 மெற்றிக் தொன்களுக்கு 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்குப் பாதகமான வானிலை நிலைமைகளும் மீளப் பயிரிடப்பட்ட, புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்புக்கள் குறைவடைந்தமையுமே முக்கிய காரணங்களாகும். 1987 இல் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினாலும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத் தினாலும் முகாமைப்படுத்தப்பட்ட இறப்பர் நிலங்களின் வளமாக்கிப் பயன்பாடு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 5 சதவீதத்தினாலும், 2 சத வீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. கடந்த ஏழு ஆண்டுக் காலப்பகுதியில் அவ தானிக்கப்பட்ட போக்கிற்கு மாறாக 1987 இல் தனியாருக்குச் சொந்தமான நிலங்களின் வளமாக்கிப் பயன்பாடும் 8 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சி யடைந்தது.

இறப்பர்க் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் தற்காலிகத் தரவுகளின்படி இவ்வாண்டுக் காலப்பகுதியில் மீளப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 1986 இன் 5,911 எக்டேயர்களிலிருந்து 5,512 எக்டேயர்களுக்கு 7 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. 1987 இல் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினுல் முகாமைப்படுத்தப்பட்ட பெருந்தோட்டங்களின் மீளப் பயிரிடல் 796 எக்டேயர்களுக்கு 8 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தவேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினுல் முகாமைப்படுத்தப்படும் பெருந்தோட்டங்களின் மீளப் பயிரிடல் 1,224 எக்டேயர்களுக்கு 11 சதவீதத்தினுல் கணிசமாக உயர்வடைந்தது. தனியார்துறைப் பெருந்தோட்டங்களின் மீளப்பயிரிடல் 3,492 எக்டேயர்களுக்கு 12 சதவீதத்தினுல் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியுற்றது. இது ஆண்டு முழுவதும் தட்டை இறப்பருக்கு உயர்ந்த விலைகள் கிடைத்தமையின் காரணமாக இறப்பர் சிறு உடமையாளர்கள் மீள்நடுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தயக்கம் காட்டியமையைப் பிரதிபலித்தது. ''கொறினஸ் போறு இலைப்புள்ளி'' நோயினுல் குறைந்தளவில் பாதிக்கப்படக்கூடிய இறப்பர் கன்றுகள் போதியளவில் கிடைக்காமல் போனமையும் 1987 இன் மீள் பயிரிடல் நடவடிக்கைகளில் பாதிப்பினை ஏற்படுத்தின. கேகாலை, களுத்துறை, இரத்தினபுரி மாவட்டங்களை உள்ளடக்கிய உலக வங்கியினுல் உதவியளிக்கப்பட்ட சிறு உடமையாளர் இறப்பர் புத்தாக்க நிகழ்ச்சித் திட்டம் 1987 இலும் தொடர்ந்தது. இத்திட்டத்தின்கீழ் 1987 இல் 2,749 எக்டேயர்கள் மீள்நடுகை செய்யப்பட்டிருப்பதுடன் இச்செயற்றிட்டத்தின் கீழ் 1987 இறுதிவரை மீள்நடுகை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பின் ஒன்றுசேர்ந்த தொகை 19,924 எக்டேயர்களாகியது.

1986 இல் 33 சதவீதத்தினுல் வீழ்ச்சிற்ற புதிய பயிரிடலின் கீழான பரப்பு 1987 இல் மேலும் 14 சதவீதத்தினுல் 1,460 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியுற்றது. இவ்வீழ்ச்சி இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினுலும் தனியார்துறையினுலும் பகிர்ந்து கொள்ளப்பட்டது. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையைப் பொறுத்தவரையில் அதன் புதிய பயிரிடலில் 20 எக்டேயர்கள் கொண்ட அதிகரிப்புக் காணப்பட்டது. பெரும்பாலான இறப்பர் வளரும் பிரதேசங்களில் நிலவிய நீண்ட கடுமையான வரட்சி நிலைமைகளும் இவ்வீழ்ச்சிக்கு காரணம்போல் தோன்றுகின்றது. சாதகமற்ற வானிலை நிலைமைகளின் பிரச்சனைகள் மட்டுமன்றி இறப்பர் நிலத்தை மேலும் விரிவாக்குவதற்குப் பொருத்தமான நிலங்கள் குறைவாக இருந்தமையும் 1987 இல் இறப்பரின் புதிய பயிரிடலைப் பாதித்தன.

1987 இல் அரசதுறைப் பெருந்தோட்டங்களினதும் தனியார்துறைப் பயிரிடுவோரினதும் உற்பத்திச் செலவுகளில் அதிகரிப்புக்கள் காணப்பட்டன. தனியார்துறையைப் பொறுத்தவரையில் உற்பத்திச் செலவு 1986 இன் கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 10.98 இலிருந்து 1987 இல் கிலோகிறாமொன்றிற்கு ரூ. 11.37 இற்கு 4 சதவீதத்தினுல் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினது உற்பத்திச் செலவும் 1986 இன் கிலோக்கிறாமொன்றிற்கான ரூ. 18.45 இலிருந்து கிலோகிறாமொன்றிற்கு ரூ. 20.92 இற்கு உயர்ந்து 13 சதவீதங் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டியவேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் செலவு 1986 இன் கிலோக்கிறாமொன்றிற்கான ரூ. 18.30 இலிருந்து 1987 இல் கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 18.74 இற்கு உயர்ந்து 2 சதவீதங் கொண்ட சிறிதளவு அதிகரிப்பினைக் காட்டியது.

1987 இல் பன்னாட்டுச் சந்தையில் இயற்கை இறப்பர் விலைகளில் சிறிய செழிப்பு ஒன்று காணப்பட்டது. 1986 இல் கிலோகிருமொன்றிற்கு ரூ. 23.83 இற்கு 12 சதவீதத்தினால் அதிகரித்த இறப்பரின் சராசரி ஏற்றுமதி (க.ஏ.பெ.) விலை 1987 இல் கிலோகிரும் ஒன்றிற்கு ரூ. 27.63 இற்கு உயர்ந்து 16 சதவீதங் கொண்ட கணிசமான அதிகரிப்பினைப் பதிவு செய்தது. இதுவே கடந்த அண்மைக் காலத்தில் பதிவு செய்யப்பட்ட மிக உயர்ந்த விலையாகும். 1987 இல் கொழும்பு ஏலங்களில் அனைத்து வகைத் தட்டை இறப்பர்களினதும், கழிவு கிறேப் இறப்பர் களினதும் சராசரி விலைகள் 1986 இன் விலைகளுடன் ஒப்பிடுகையில் கணிசமான அதிகரிப்புக்களைப் பதிவு செய்தவேளையில் லேட்டெக்ஸ் கிறேப்பின் விலைகள் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சிகளைக் காட்டின. 1987 இல் கொழும்பு ஏலங்களில் இடம் பெற்ற முக்கிய முன்னேற்றங்களில் ஒன்று பட்டையாக்கப்பட்டுப் புகை யூட்டப்பட்ட தட்டை இறப்பரின் மிக உயர்மட்ட விலைகளாகும். இம்முன்னேற்றத் திற்கான முக்கிய உதவு காரணிகளாகச் சாதகமற்ற வானிலை நிலைமைகளின் காரணமாக ஏற்பட்ட குறைவடைந்த உள்நாட்டு நிரம்பல்கள், நுகர்வோரின் குறைவான இருப்புக்களின் விளைவாகத் தோன்றிய தீவிரமான கேள்வி, அபி விருத்தியடைந்த நாடுகளின் உந்து ஊர்தி, டயர் கைத்தொழில்களின் சிறந்த செயலாற்றம், முக்கிய இறப்பர் உற்பத்தி நாடுகளான மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா என்பனவற்றில் காலத்திற்குக் காலம் ஏற்படும் குறைவான இறப்பர் வெளியீடுகள் என்பன விளங்கின. 1987 இல் கொழும்பு ஏலங்களில் காணப்பட்ட மற்றொரு முக்கிய அபிவிருத்தி யாதெனில் தரமற்ற வகை இறப் பருக்கான உள்நாட்டு இற பர் தயாரிப்பாளர்கள் ஏற்றுமதியாளர்களின் தீவிர மான கேள்வியாகும். அதிகரித்த தட்டை இறப்பர் விலைகளிலிருந்தும் இறப்பர் சிறு நில உடமையாளர்கள் நன்மையடைந்தவேளையில், கிறேப் இறப்பரின் தாழ்ந்த விலைகள் அரசதுறைப் பெருந்தோட்டங்களின் உற்பத்தியாளர் இலாபங்கள் மீது எதிர்க்கணியத் தாக்கத்தை ஏற்படுத்தின. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை யின் உற்பத்தியாளர் இலாபம் 1986 இன் கிலோவொன்றிற்கு ரூ. 3.36 இலிருந்து 1987 இல் கிலோவொன்றிற்கு ரூ. 0.53 கொண்ட எதிர்க்கணிய இலாபத்திற்கு மோசமாகக் குறைவடைந்த வேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனத்தின் நேர்க்கணிய இலாபம் 1986 இன் கிலோகிருமொன்றுக்கு ரூ.2.98 இலிருந்து 1987 இல் கிலோகிருமொன்றிற்கு ரூ. 1.17 இற்கு வீழ்ச்சியடைந்தது.

இறப்பரின் உள்நாட்டு நுகர்வு 1986 இன் 164 இலட்சம் கிலோகிரும்களி லிருந்து 1987 இல் 180 இலட்சம் கிலோகிரும்களுக்கு 10 சதவீதத்தினால் கணிசமாக முன்னேற்றமடைந்து மொத்த உற்பத்தியில் 15 சதவீதத்திற்கு வகை கூறியது. உள்நாட்டு நுகர்வோர் கொழும்பு ஏலங்களில் ஆண்டு முழுவதும் தரங் குறைந்த இறப்பரைச் சுறுசுறுப்பாகக் கொள்வனவு செய்தமையின் விளை வாகத் தரம் குறைந்த இறப்பரின் விலைகள் நிலையாக அதிகரித்தன.

இறப்பர்துறையில் பல்வேறு பயிரிடல் வழிமுறைகளுக்கான உதவுதொகைத் திட்டங்கள் மாற்றமெதுவுமின்றி இருந்தன. ''கொறினஸ் போரு கசிகோலா'' என்னும் இலைப் புள்ளி நோயினால் குறிப்பாக இறப்பர் மீள்நடுகை, புதுநடுகை உதவுதொகைத் திட்டத்தின்கீழ் பயிரிடப்பட்ட பதியம் ஆர்.ஆர்.ஐ.சி. 103 செடிகள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இந்நோய் முக்கியமாக அவி சாவலை, இரத்தினபுரி, காலி, களுத்துறை ஆகிய பிரதேசங்களில் காணப்பட்டது. இவ்வாண்டில் தனியார்துறையில் இந்நோயினால் பாதிக்கப்பட்ட 872 எக்டேயர் நிலப்பரப்பு பிடுங்கப்பட்டதுடன் 364 எக்டேயர்கள் இந்நோயை எதிர்த்து நிற்கக் கூடிய ஆற்றலைக் கொண்ட பதியங்கள் மூலம் மீளப் பயிரிடப்பட்டன.

1987 நவெம்பரில் இறப்பர் ஆராய்ச்சி தீர்வை கிலோக்கிருமுக்கு 10 சதத்திஞல் 25 சதத்திற்கு அதிகரிக்கப்பட்டதன் மூலம் ஏற்றுமதி செய்யப்படும் ஒவ்வொரு கிலோகிரும் இறப்பர் மீதும் கொடுபடத்தக்க மொத்தத் தீர்வை கிலோகிருமிற்கு ரூ. 1.46 ஆகியது.

தெங்கு

வானிலேயில் பெருமளவிற்குத் தங்கியிருக்கும் தெங்கு உற்பத்தி 1986 இல் 30,390 இலட்சம் காய்களைக் கொண்ட மிக உயர் மட்டத்தை அடைந்ததெனினும் 1987 இல் கடுமையாகப் பின்னடைவிற்குட்பட்டு 22,920 இலட்சம் காய்களுக்குக் குறைவடைந்து 25 சதவீதங் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவு செய்தது. முன்னைய ஆண்டின் தொடர்பான காலப் பகுதிகளுடன் ஒப்பிடுகையில் 1987 இன் முன்னரைப் பகுதியில் உற்பத்தி 19 சதவீதத்திஞல் வீழ்ச்சியடைந்தவேளையில் பின்னரைப் பகுதியின் வீழ்ச்சி 30 சதவீதமாக இருந்தது. பெருமளவு வீழ்ச்சி 1986 இலும், 1987 இலும் நிலவிய நீண்ட வரட்சி நிலைமைகளின் பெருமளவு தாக்கத்தைப் பிரதிபலித்தது. அத்துடன் 1985 இலும், 1986 இன் முற்பகுதியிலும் மிகக் குறைந்த தேங்காய் விலைகள் இவ்வாண்டுகளில் வளமாக்கிப் பயன்பாட்டின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தமையும் உற்பத்தியின் மீதான காலங் கடந்த பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

காய்களின் உற்பத்தியில் ஏற்பட்ட கூடுதலான வீழ்ச்சி தேங்காய் எண்ணெய், தேங்காய்த் துருவல் இரண்டினதும் உற்பத்தியில் பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. இதனுல் 1987 இல் தேங்காயெண்ணெய் உற்பத்தியும், தேங்காய்த் துருவல் உற்பத்தியும் முறையே 50 சதவீதத்திஞலும், 18 சதவீதத்திஞலும் வீழ்ச்சியடைந்தன. 1986 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உலர்த்திய தேங்காய், உடன்காய் ஏற்றுமதிகள் முறையே 8 சதவீத, 11 சதவீத வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன.

1987 இல் தெங்குத்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 42,178 மெற்றிக் தொன்களுக்கு 34 சதவீதத்திஞல் அதிகரித்தன. அதிகரித்த வளமாக்கிப் பாவனை முதன்மையான தெங்கு வளரும் பிரதேசங்களின் சார்பு ரீதியில் சாதகமான வானிலை நிலைமைகளுடனும், தேங்காயின் விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களுடனும் இணைந்ததாக ஆண்டின் பின்னரைப் பகுதியில் மிகக் கூடுதலாகக் காணப்பட்டது. இரு அரசுடமையாக்கப்பட்ட வர்த்தக வங்கிகளான இலங்கை வங்கியினுலும், மக்கள் வங்கியினுலும் தொழிற்படுத்தப்பட்ட தெங்கு வளமாக்கிக் கொடுகடன் திட்டம் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கையில் சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவு செய்தது. 1987 இல் இத்திட்டத்தின் கீழ்ப் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 33 இலட்சமாக அமைந்து 1986 இல் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகையை ஏறத்தாள ஒத்ததாக விளங்கியது.

1987 இன் முற்பகுதியின் முக்கிய பண்பாகக் காணப்பட்ட கடுமையான வரட்சி நிலைமைகள் பல்வேறுபட்ட உதவு தொகைத் திட்டங்களின் செயலாற்றத்தினைக் கடுமையாகப் பாதித்துள்ளதுபோல் தெரிகிறது. இவ்வாண்டுக் காலத்தில் புத்தாக்கம் செய்யப்பட்ட தெங்கு நிலங்களின் பரப்பு 6,383 எக்டேயர்களுக்கு 16 சதவீதத்திஞல் வீழ்ச்சியடைந்தது. மாருகப் புத்தாக்கத்திற்கான மொத்த உதவுதொகைக் கொடுப்பனவு ரூ. 170 இலட்சத்திற்கு 44 சதவீதத்திஞல் அதிகரித்தமைக்குக் குறிப்பாக உள்ளீடுகளின் பகிர்ந்தளிப்புக்களுடன் தொடர்பான ஆதரவுப் பணிகள் வலுவாக்கப்பட்டதன் விளைவாக உதவுதொகையின் இரண்டாவது, மூன்ருவது தவணைப் பணங்களைப் பெற்றுக்கொள்வதற்குப் பயிர்ச்செய்கையாளர்கள் காட்டிய அதிகரித்த ஆர்வமே முக்கிய காரணமாகும்.

1987 இல் கீழ்ப் பயிரிடப்பட்ட, மீளப் பயிரிடப்பட்ட இணைந்த நிலப்பரப்பு 2,922 எக்டேயர்களுக்கு 31 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் இதன் பொருட்டுச் செலுத்தப்பட்ட மொத்த உதவு தொகை ரூ. 166 இலட்சத்திற்கு 18 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மாறாக, தெங்கு புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு (0.4 எக்டேயர்களுக்கும் குறைவான சிறு நில உடமைகள் தவிர) 1,850 எக்டேயர்களுக்கு 26 சதவீதத்தினால் உயர்வடைந்தது. இந்நோக்கத்திற்காகச் செலுத்தப்பட்ட மொத்த உதவு தொகை ரூ. 153 இலட்சத்திற்கு 16 சதவீதத்தினால் அதிகரித்தது. 1987 இல் தெங்கு நிலங்களில் கால்நடைகளுக்கான புல், மிளகு, கோப்பி, கொக்கோ என்பனவற்றைக் கொண்ட இடைப் பயிர்ச்செய்கையும் முறையே 40 சதவீதத்தினாலும், 12 சதவீதத்தினாலு ம்,36 சதவீதத்தினாலும் ,53 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன.

## அட்டவணை 1.12

## தெங்குத்துறையின் புள்ளி விபரங்கள் 1985—1987

| விடயம் | அலகு | 1985 | 1986 | 1987(அ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி (ஆ) ... | ப. இ. காய்களில் | 2,958 | 3,039 | 2,292 |
| 1.1. தேங்காய்த் துருவல் .. | ப. இ. காய்களில் (இ) | 362 | 428 | 350 |
| 1.2. தேங்காய் எண்ணெய் .. | ப. இ. காய்களில் (இ) | 1,038 | 1,146 | 573 |
| 1.3. உலர்த்தியதேங்காய்ஏற்றுமதிகள்(ஈ) | ப. இ. காய்களில் (இ) | 37 | 48 | 44 |
| 1.4. உடன்காய் ஏற்றுமதிகள் ... | ப. இ. காய்களில் | 10 | 18 | 16 |
| 1.5. உள்நாட்டு தேங்காய் நுகர்வு (உ) ... | ப. இ. காய்களில் | 1,425 | 1,451 | 1,368 |
| 2. சராசரி விலை | | | | |
| 2.1. கொழும்பு ... | காய்க்கு ரூபா | 2.18 | 1.83 | 3.29 |
| 2.2. ஏற்றுமதி க. எ. பெ. ... | காய்க்கு ரூபா | 2.63 | 1.57 | 2.80 |
| 3. வளமாக்கி வழங்கல்கள் ... | '000 மெ. தொ. | 41.0 | 31.6 | 42.2 |
| 4. உற்பத்திச் செலவு ... | காய்க்கு ரூபா | 0.64 | 0.66 | 0.62 |
| 5. மீள் பயிரிடல்/கீழ் பயிரிடல்(ஊ) ... | எக்டேயர்கள் | 4,102 | 4,206 | 2,922 |
| 6. புதிய பயிரிடல் (ஊ) ... | எக்டேயர்கள் | 1,561 | 1,465 | 1,850 |
| 7. ஏற்றுமதி வருவாய்கள் ... | ப. இ. ரூபா | 3,093 | 2,389 | 2,140 |
| | (சிஎஉ ப. இ.) | (112) | (73) | (56) |
| 7.1. உள்ளீட்டு உற்பத்திகள் ... | ப. இ. ரூபா | 2,383 | 1,609 | 1,423 |
| | (சிஎஉ. ப. இ.) | (86) | (49) | (37) |
| 7.2. ஏனைய உற்பத்திகள் ... | ப. இ. ரூபா | 710 | 780 | 717 |
| | (சிஎஉ. ப. இ.) | (26) | (24) | (19) |
| 8. மொ. உ. உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (எ) ... | | 3.3 | 2.6 | 2.6 |

மூலங்கள்: தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை,
தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபை,
தேசிய வளமாக்கிச் செயலகம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை.

(ஆ) மதிப்பீடு (உலர்த்திய தேங்காய் இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு சீராக்கஞ் செய்யப்படுவதன் காரணமாக பகுப்பாய்வின் கூட்டுத்தொகை மொத்தத்துடன் ஒத்திருக்கமாட்டாது.)

(இ) தேங்காய்க்குச் சமனான ஒரு — மெற். தொன் தேங்காய்த் துருவல் = 6,800 காய்கள்.
— மெற். தொன் எண்ணெய் = 8,000 காய்கள்.
— மெற். தொன் உலர்த்திய தேங்காய் = 4,925 காய்கள்.

(ஈ) ஏற்றுமதிகள் மட்டும்

(உ) தலைக்குரிய வீட்டு நுகர்வு ஆண்டுக்கு 90 காய்களென்ற அடிப்படையில் மதிப்பிடப்பட்டது. கைத்தொழில் பயன்பாட்டினைத் தவிர.

(ஊ) விபரமான தரவுகள் கிடைக்காமையின் காரணமாக 0.4 எக்டேயர்களுக்கும் குறைவான உடைமைகளில் மேற்கொள்ளப்பட்ட பயிரிடல் நடவடிக்கைகளை இது உள்ளடக்கவில்லை.

(எ) உற்பத்தி செய்தலும் பதனிடலும் மட்டும்.

1987 இல் பன்னுட்டுச் சந்தையில் மூன்று முக்கிய தெங்கு உற்பத்திகளினதும் விலைகள் குறிப்பிடத்தக்களவில் மீள் நன்னிலையடைந்தமைக்கு வலுவான கேள்வி, இறக்குமதியாளர், உற்பத்தியாளர்களின் குறைவான இருப்பு, தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து குறிப்பாக நீண்ட கடுமையான வரட்சியினுலும், தைப்பூன் சூருவளியினுலும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பிலிப்பைன்சிலிருந்தான நிரம்பல் குறைவடைந்தமை போன்ற காரணிகள் ஒருங்கிணைந்தமையே காரணமாகும். எனினும் பன்னுட்டு விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க விலை அதிகரிப்புக்களி லிருந்து ஆகக் கூடிய நன்மைகளை இலங்கை பெறமுடியாமல் போனமைக்கு உற்பத்தியில் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டமையும் அதன் விளைவாக உள்நாட்டு விலைகள் அதிகரித்தமையும் காரணங்களாகும். இவை ஒன்று சேர்ந்து ஏற்றுமதி செய்யத்தக்க மிகையின்மீது பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தின. 1987 இல் தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் ஏற்றுமதிகளுக்குச் சமமான காய்கள் 5,380 இலட்சத்திற்கு 51 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தன.

1987 இல் தேங்காய் விலைகளில் ஏற்பட்ட பெரும் அதிகரிப்பிலிருந்தும் உற்பத்தியாளர்கள் நன்மையடைந்தனர். 1987 இல் தெங்கின் சராசரி கொழும்பு சந்தை விலைகள் 1986 இன் காயொன்றிற்கு ரூ. 1.83 இலிருந்து 1987 இல் ரூ. 3.29 இற்கு 80 சதவீதத்தினுல் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. 1987 இல் உற்பத்திச் செலவு காயொன்றிற்கு ரூ. 0.62 சதமாக மதிப்பிடப்பட்டதுடன் 1986 இல் பதிவு செய்யப்பட்ட காயொன்றிற்கான செலவான ரூ. 0.66 இனைவிட 6 சதவீதம் குறைவாக இருந்தமைக்கு முன்னர் கூறிய சாதகமற்ற வானிலை நிலைமைகளின் விளைவாகச் சில குறிப்பிட்ட வேளாண்மை நடைமுறைகளைச் செறிவான முறையில் மேற்கொள்வது குறைவடைந்தமையே முக்கிய காரண மாகும்.

1987 இல் தெங்கிற்கான சமநிலைப்படுத்தும் நிதியத்தின் கீழ் இரண்டு உதவித் திட்டங்கள் தொழிற்பாட்டிலிருந்தன. தெங்கு வளமாக்கியின் போக்கு வரத்துச் செலவிற்கு உதவு தொகை வழங்கல், மற்றும் மீள் அட்டவணையிடப் பட்ட தெங்கு வளமாக்கிக் கடன்களின் மீதான வட்டிக் கொடுப்பனவு என்பனவே அவையாகும். முதல் திட்டத்தின் கீழ் தெங்கு வளமாக்கி போக்குவரத்திற்காக வளமாக்கி பகிர்ந்தளிப்பாளர்களுக்கு மெற்றிக் தொன்னென்றிற்கு ரூ. 150 கொண்ட உதவு தொகை செலுத்தப்பட்டது. தெங்கு வளமாக்கி கொடுகடன் திட்டத்தின் கீழ் மக்கள் வங்கியிலிருந்தும், இலங்கை வங்கியிலிருந்தும் பயிர் செய்கையாளரினுல் பெறப்பட்ட மீள் அட்டவணையிடப்பட்ட கடன்கள் மீதான வட்டி இரண்டாவது திட்டத்தின் கீழ் உதவப்பட்டது. தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபை சமநிலைப்படுத்தும் நிதியத்தின் சார்பில் இரு திட்டங்களையும் தொழிற்படுத்தியது. தேங்காய் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புடன் இவ்விரு திட்டங்களினதும் உதவிகள் 1987 திசெம்பர் 31 ஆம் நாளிலிருந்தும் இடை நிறுத்தப்பட்டன.

ஏற்றுமதி தொடர்பான ஆவணமிடும் வேலைகளை ஆகக் குறைப்பதனையும் ஏற்றுமதிக்கான தெங்கு உற்பத்திகளைப் பாதிக்கும் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளை அகற்றுவதனையும் நோக்கமாகக் கொண்டு அரசாங்கம் 1987 திசெம்பர் 1 ஆம் நாளிலிருந்து உலர்த்திய தேங்காய், தேங்காயெண்ணெய், தேங்காய்த் துருவல், கயிற்றுத் தும்பு என்பனவற்றின் ஏற்றுமதி உரிமங்களை ஒழித்தது. எனினும் தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபை வாங்குவோர், விற்போரின் நன்மைக் காக உலர்த்திய தேங்காய்களின் ஏலங்களைத் தொடர்ந்தும் நடத்தியதுடன்

ஏலங்களுடன் தொடர்பான ஏனைய அனைத்துப் பணிகளையும் வழங்கியது. மேலும் அபிவிருத்தி மேலாண்மைச் சபையுடன் பதிவு செய்யப்பட்ட ஆலைகளில் ஏற்று மதிக்காக உற்பத்தி செய்யப்பட்ட தேங்காய்த் துருவலுக்குச் சுட்டுத்துண்டிடல், மாதிரியிடல், பரீட்சித்தல் என்பனவற்றுடன் தொடர்பான ஒழுங்குகள் இவ் வாண்டிலும் நடைமுறையிலிருந்தன.

**சிறு ஏற்றுமதிப் பயிர்கள்**

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் பெருமளவுக்கு வீட்டுத் தோட்டங்களில் பயிரிடப் படும் பல நீண்ட நாள் பயிர்களை உள்ளடக்கும். எனவே பயிர்ச்செய்கைக்குட்பட்ட நிலப்பரப்பு அல்லது உற்பத்தி தொடர்பான சரியான தரவுகளைப் பெறுவது கடினமானதாகும். எனினும் இப்பயிர்களின் உற்பத்தியில் பெரும்பகுதி ஏற்றுமதி செய்யப்படுவதனால் ஏற்றுமதி அளவே உற்பத்தியின் அளவாகக் கருதப்படலாம்.

ஏற்றுமதித் தரவுகளின் அடிப்படையில், சிறு ஏற்றுமதிப் பயிர்களின் செய லாற்றம் 1987 ஆம் ஆண்டில் கலந்துபட்டுக் காணப்படுவது புலனாகின்றது. ஏற்றுமதி அளவுகளில் காணப்படும் குறிப்பிடத்தக்களவிலான அதிகரிப்பு மிளகு முந்திரிப் பருப்பு என்பவற்றின் உற்பத்தி 1987 ஆம் ஆண்டில் கணிசமானளவு அதிகரித்தமையைக் காட்டுகின்றது. முந்திரிப் பருப்பின் ஏற்றுமதியளவு 1987 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இரு மடங்குக்கு மேலாக அதிகரித்துக் காணப்பட்டது. 1986 இல் 5 சதவீதத்தினால் அதிகரித்த மிளகின் ஏற்றுமதி அளவு 1987 இல் 58 சதவீதத்தினால் உயர்வடைந்தது. எனினும் ஏனைய மூன்று முக்கிய பயிர்களின தும் ஏற்றுமதி அளவு அதாவது கராம்பு, சாதிக்காயும், சாதிப்பத்திரியும் ஏலக்காய் என்பவற்றின் அளவுகள் முறையே 34 சதவீதம், 26 சதவீதம், 30 சதவீதத் தால் வீழ்ச்சியடைந்து உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிகளைப் பிரதிபலித்தன.

சிறு ஏற்றுமதிப் பயிர்த்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1986 இன் 2,356 மெற்றிக் தொன்களிலிருந்து 35 சதவீதத்தால் அதிகரித்து 1987 இல் 3,191 மெற்றிக் தொன்களாக விளங்கின.

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம் 1987 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இப்பயிர்களின் பயிர்ச்செய்கையினை ஊக்குவித்தற்கான உதவித் திட்டங்களைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. சிறு ஏற்றுமதிப் பயிர் உதவித்திட்டத்தின்கீழ் 1987 இல் பயிரிடப்பட்ட, மீளப் பயிரிடப்பட்ட, புத்தாக்கம் செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்புக்கள் கணிசமானளவில் 29 சதவீதத்தால் 1,087 எக்டேயர் களுக்கு அதிகரித்துக் காணப்பட்டன. ஏற்றுமதி விலைகளின் சாதசமான தாக்கத் தினைப் பிரதிபலிக்கும் வகையில் கறுவாவின் புத்தாக்கமும், மிளகின் புதிதாகப் பயிரிடலும் கணிசமானளவுக்கு அதிகரித்தன. சிறு ஏற்றுமதிப் பயிர் உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உதவுதொகை அளவு 1986 இன் ரூ. 120 இலட்சத்திலிருந்து 16 சதவீதத்தால் 1987 இல் 139 இலட்சத்திற்கு அதிகரித்துக் காணப்பட்டது. ஏற்றுமதி மற்றும் உற்பத்திகளுக்குப் பெருமளவு ஊக்குவிப்பு வழங்கும் நோக்குடன் சிறு வேளாண்மை உற்பத்திகள் மீதான ஏற்றுமதித் தீர்வைகள் அரசாங்கத்தினால் 1987 நவெம்பரில் நீக்கப்பட்டன.

தற்போது மொத்த ஏற்றுமதிகளில் சிறு ஏற்றுமதிப் பயிர்களின் பங்கு சிறிதாக விளங்கியபோதும் சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தியினையும், ஏற்று மதி வருவாயையும் அதிகரிக்கப் பெருமளவிலான உள்ளார்ந்த வாய்ப்புக் காணப் படுகின்றது. இவ் உள்ளார்ந்த வளத்தினைப் பெறுவதற்கு விளைச்சல் மேம்பாட் டினை அடைவதற்குத் தடையாயுள்ள தொழில்நுட்பத் தடைகளை இனங்கண்டு தவிர்த்தல் முக்கியமானதாகும். இது தொடர்பாகச் சிறந்த விரிவாக்கப் பணிகளை ஏற்படுத்துவதும் முக்கிய ஒரு நடவடிக்கையாகும்.

நெல்

1987 ஆம் ஆண்டில் நெல் உற்பத்தி 18 சதவீதத்தால் 21 இலட்சம் மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. (1,020 இலட்சம் புசல்கள் நெல் அல்லது 15 இலட்சம் மெற்றிக் தொன் அரிசியாகும்) இது நெல் உற்பத்தி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்த இரண்டாவது ஆண்டாக விளங்கியதுடன் 1987 இன் மட்டம், 1979 இற்குப் பின்னர் ஏற்பட்ட ஆகக் குறைந்த மட்டமாக விளங்கியது.

1987 இன் உற்பத்தி வீழ்ச்சிக்கு முக்கியமாக, பயிர்ச்செய்கை ஆண்டில் முக்கிய நெல் உற்பத்தி நிலப்பரப்புக்களில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட வரட்சி நிலைமையே காரணமாகும். தண்ணீர் தட்டுப்பாடு பயிர்ச்செய்கையினைத் தாமதப் படுத்தியதோடு மட்டுமன்றி, விதைக்கப்பட்ட நிலப்பரப்பினையும் குறைவடையச் செய்ததோடு வளமாக்கிப் பயன்பாட்டினையும் குறைத்து, அறுவடை செய்யப்பட்ட நிலப் பரப்பினையும் குறைவடையச் செய்து இறுதியாக 1986/87 பெரும்போகம், 1987 சிறுபோகம் இரண்டினதும் குறைந்த உற்பத்திக்கும் காரணமாக அமைந் தது. இவ்வாண்டுக் காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவிய அமைதியற்ற நிலைமையும் நெல் உற்பத்தியின் கணிசமானளவு வீழ்ச்சிக்கு ஒரு காரணமாயிற்று.

1986/87 பெரும்போக உற்பத்தி 13.9 இலட்சம் மெற்றிக் தொன்களாக விளங்கி (667 இலட்சம் புசல்கள்) முன்னைய ஆண்டின் பெரும்போக காலத்தைவிட 18 சதவீதங் கொண்ட கணிசமானளவு வீழ்ச்சியைக் காட்டியது. குருநாகல், மன்னார், அனுராதபுரம், புத்தளம் என்னும் மாவட்டங்களின் ஒன்றிணைந்த வெளியீடு 1985/86 பெரும்போகத்திற்கான மொத்த வெளியீட்டில் 30 சதவீதத் திற்கு வகைகூறி 1986/87 பெரும்போகக் காலப்பகுதியில் கணிசமானளவு வீழ்ச்சி யினைப்பதிவு செய்தது.

1987 சிறுபோகத்திற்கான உற்பத்தியும் முன்னைய ஆண்டின் சிறுபோக காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 18 சதவீதத்தால் அல்லது 164,675 மெற்றிக் தொன்களால் வீழ்ச்சியடைந்தது. 1986 சிறுபோகத்தில் மொத்த நெல் வெளி யீட்டில் 12 சதவீதத்திற்கு வகைகூறிய குருநாகல், மன்னார், அனுராதபுரம், புத்தளம் ஆகிய மாவட்டங்களின் இணைந்த உற்பத்தி 1987 சிறுபோக காலப் பகுதியில் 35 சதவீதத்தால் அல்லது 38,263 மெற்றிக் தொன்களால் வீழ்ச்சி யடைந்தது.

பிரதான நீர்ப்பாய்ச்சல் பெறும் நிலப்பரப்புக்களின் விளைச்சல் உயர்வடைந்தமையால் 1987 பயிர்ச்செய்கை ஆண்டில் எக்டேயர் ஒன்றிற்கான சராசரி விளைச்சல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2 சதவீதத்தினால் 3,564 கிலோக்கிரும்களுக்குச் சிறிதளவு அதிகரித்தது. 1986/87 பெரும்போகக் காலப்பகுதியில் எக்டேயருக்கான சராசரி விளைச்சல் முன்னைய பெரும்போகக் காலப்பகுதியைவிட 2.6 சதவீதத்தால் 3,678 கிலோகிரும்களுக்கு உயர்வடைந்தது. பெரும்போகத்தில் ஆகக்கூடிய சராசரி விளைச்சலான ஒரு எக்டேயருக்கு 5,973 கிலோகிரும்கள் உடவளவைப் பகுதியில் கிடைக்கப்பெற்றது. இது முன்னைய பெரும்போகத்தினை விட 17 சதவீதம் உயர்வானதாகும். இதற்கு அடுத்த உயர்வான விளைச்ச

## அட்டவணை 1.13

## நெல்துறை மீதான புள்ளி விபரங்கள் 1986—1987

| விடயம் | அலகு | 1986 | | | 1987(அ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பளவு ... | '000 எக்டேயர்கள் | 555 | 340 | 895 | 508 | 273 | 781 |
| வளமாக்கி வழங்கல்கள்(ஆ) | '000மெ.தொன்கள் | 124 | 73 | 197 | 115 | 36 | 151 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ. ப. இ. | 101 | 90 | 190 | 183 | 79 | 262 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த பரப்பளவு ... | '000 எக்டேயர்கள் | 527 | 308 | 835 | 433 | 246 | 679 |
| எக்டேயருக்கான விளைச்சல் (இ) ... | கி. கிரும்கள் | 3,585 | 3,287 | 3,500 | 3,678 | 3,362 | 3,564 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய பரப்பளவு ... | '000 எக்டேயர்கள் | 468 | 271 | 739 | 380 | 217 | 597 |
| உற்பத்தி ... | '000மெ. தொன்கள் ('000புசல்கள்) | 1,688 (80,896) | 900 (43,130) | 2,588 (124,026) | 1,392 (66,727) | 735 (35,239) | 2,128 (101,966) |
| உ.வி.தி. கீழ் கொள்வனவு செய்யப்பட்டவை (ஈ) ... | '000மெ. தொன்கள் | 138 | 16 | 154 | 57 | 07 | 64 |
| இறக்குமதி அரிசி ... (நெல்லிற்குச் சமன்) ... | '000மெ. தொன்கள் | — — | — — | 220 (314) | — — | — — | 102 (146) |

மூலங்கள்: குடிமதிப்பு புள்ளி விபரத்திணைக்களம்,
வேளாண்மைத் திணைக்களம்,
வேளாண்மை அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சு,
நெற் சந்தைப்படுத்தும் சபை,
தேசிய வளமாக்கிச் செயலகம்,
உணவு ஆணையாளர் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை

(ஆ) பயிர்ச்செய்கை ஆண்டினதும் கலண்டர் ஆண்டினதும் வளமாக்கி வழங்கல்கள் அடிப்படையில் மாறுபட்டதாகும். பயிர்ச்செய்கை ஆண்டு பெரும்போகத்தையும் (செத்தெம்பர்/ஒற்றோபர்-மாச்சு/எப்பிறல்). சிறுபோகத்தையும் (எப்பிறல்/மே-ஓகத்து/செத்தெம்பர்) உள்ளடக்கும்.

(இ) பெரும்போக சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு, குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. அத்தரவுகள் பயிர் அறுவடை அளவீடுகள் அடிப்படையில் அமைந்தனவாகும். அதேவேளையில், மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் மொத்த விளைவு கணக்கிடப்படுகிறது.

(ஈ) ஓகத்திலிருந்து திசெம்பர் காலப்பகுதியில் சிறுபோக-அறுவடை கொள்வனவு செய்யப்பட்டவேளையில் சனவரியிலிருந்து யூலை காலப்பகுதியில் பெரும்போக நெல் அறுவடை கொள்வனவு செய்யப்பட்டது.

லான எக்டேயருக்கு 5,272 கிலோகிரும்களை மகாவலி ''எச்'' வலயம் 1986/87 பெரும்போகத்தில் பெற்றது. சராசரி விளைச்சலுக்கான அதிகரிப்புக்கு முக்கிய நீர்ப்பாசனப் பகுதிகளில் அதிகமானவற்றில் 1986/87 பெரும்போக காலத்தில் ஆகக் கூடியளவு வளமாக்கி பயன்படுத்தப்பட்டமையே பெரிதும் காரணமாகும்.

1987 சிறுபோகத்தில் சராசரி விளைச்சலானது முன்னைய ஆண்டின் சிறு போகத்துடன் ஒப்பிடுகையில் எக்டேயர் ஒன்றுக்கு 3,362 கிலோகிரும்களாக விளங்கி 2.3 சதவீதமான அதிகரிப்பினைப் பதிவு செய்தது. பெரும்போகத்தைப் போலன்றி இந்த அதிகரிப்பானது சிறிய நீர்ப்பாசனத் திட்டப் பகுதிகளின் விளைச்சலில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக ஏற்பட்டது. இது மொத்த விளைச்சலில் மழை நீரை நம்பிய பகுதிகளின் விளைச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சியின் பாதகமான தாக்கங்களினை மிகக் கூடுதலாக ஈடுசெய்தது. 1987 சிறுபோகத்தில் முக்கிய நீர்ப்பாசனத் திட்டப் பகுதிகளின் சராசரி விளைச்சல் முன்னை சிறுபோக காலத்தின் அதே மட்டத்திலேயே நிலைத்திருந்தது. இக்காலத்தில் உடவளவைப் பகுதியிலிருந்து ஆகக்கூடிய எக்டேயருக்கான விளைச்சலான 4,602 கிலோகிரும்கள் பெறப்பட்டது. அடுத்த உயர்ந்தளவு சராசரி விளைச்சலாக அம்பாறை மாவட்டம் எக்டேயர் ஒன்றுக்கு 4,280 கிலோகிரும்களைப் பதிவு செய்த வேளையில் அம்பாந் தோட்டை மாவட்டம் எக்டேயர் ஒன்றுக்கு 4,261 கிலோகிரும்களைச் சராசரி விளைச்சலாகப் பதிவு செய்து அடுத்த இடத்தை வகித்தது.

நெற்செய்கையின் கீழ் விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1987 இல் 13 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 1986/87 பெரும்போகத்தில் விதைக்கப்பட்ட நிலப்பரப்பின் அளவு 9 சதவீதத் தால் 507,830 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தவேளையில் சிறுபோகத்தில் 20 சதவீதத்தால் 273,396 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. நெற்செய்கை யின் கீழ் விதைக்கப்பட்ட நிலப்பரப்பில் கணிசமான வீழ்ச்சிகள் முக்கிய நெல் உற்பத்தி மாவட்டங்களான குருநாகல், அனுராதபுரம், திருகோணமலை போன்றவற்றில் பதிவு செய்யப்பட்டன. 1986/87 பெரும்போகத்தில் விதைக்கப் பட்ட மொத்த நிலப்பரப்பில் ஏற்பட்ட வீழ்ச்சியானது சிறு நீர்ப்பாசனப் பகுதிகளில் 19 சதவீதமாக மிக அதிகமாகவும், மழை வீழ்ச்சியைப் பெறும் நிலப்பரப்பும் முக்கிய நீர்ப்பாசனப் பகுதிகளிலுள்ள நிலப்பரப்பும் முறையே 6.8 சதவீதம், 3.8 சதவீத வீழ்ச்சிகளைக் கொண்டிருந்து சார்புரீதியில் குறை வானதாகவும் விளங்கின. சிறுபோகத்திலும் கூட சிறு நீர்ப்பாசனப் பகுதிகள் மொத்த விதைக்கப்பட்ட நிலப்பகுதியில் ஆகக் கூடியளவுக்கு 30 சதவீதமான வீழ்ச்சியினைக் கொண்டிருந்த வேளையில், மழை நீரை நம்பிய பகுதிகளும், முக்கிய நீர்ப்பாசனப் பகுதிகளும் முறையே 18 சதவீதம், 17 சதவீதமான வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன.

1987 இல் மொத்தமாக அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பின் அளவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 19 சதவீதங் கொண்ட வீழ்ச்சியினைப் பதிவு செய்தது. 1986/87 பெரும்போகத்தில் அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப் பரப்பு 18 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தவேளையில் சிறுபோகத்தில் 20 சதவீதத் தால் வீழ்ச்சியுற்றது. 1987 இல் விதைக்கப்பட்ட நிலப்பரப்பிற்கும் அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்புக்கும் இடையிலான வேறுபாடு முக்கியமாக வரட்சி நிலைமைகளின் காரணத்தினுல் 102,479 எக்டேயர்களாக அல்லது விதைக் கப்பட்ட மொத்த நிலப்பரப்பில் 13 சதவீதமாக விளங்கியது. பெரும்போக காலத்தில் இடம்பெற்ற பயிர் இழப்பு மொத்த விதைக்கப்பட்ட நிலப்பரப்பில்

15 சதவீதமளவுக்கு மிக உயர்வாக விளங்கியது. சிறுபோகத்தில் பயிர் இழப்பின் அளவு 10 சதவீதமாக இருந்தது. மிகவும் கடுமையான வரட்சி நிலமைகளைக் கொண்டிருந்த குருநாகல் மாவட்டம் இரு பருவ காலங்களிலும் மிகக் கூடுதலான பயிர் இழப்புக்களைக் கொண்டிருந்தது. குருநாகல் மாவட்டத்தில் அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பின் அளவு 1986/87 பெரும்போக காலத்திலும் 1987 சிறுபோகத்திலும் முறையே 32 சதவீதமாகவும், 53 சதவீதமாகவும் மட்டும் காணப்பட்டது. குருநாகல் மாவட்டத்தில் வரட்சி நிலவரங்களினால் பாதிப்பு அடைந்த மொத்த நிலப்பரப்பின் அளவு விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பில் பெரும்போக காலத்தின் 50 சதவீதமாகவும், சிறுபோகத்தில் 33 சதவீதமாகவும் விளங்கியது.

வேளாண்மை அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சின்படி 1987 பயிர்ச்செய்கை யாண்டின் நெற்றுறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 150,900 மெற்றிக் தொன்களாக விளங்கின. இது முன்னைய பயிர்ச்செய்கை ஆண்டின் வழங்கலைவிட 23 சதவீதம் குறைவானதாகும். வளமாக்கி வழங்கல்கள் 1986/87 பெரும்போக காலத்தில் 7 சதவீதத்தால் 115,320 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தன. 1987 சிறுபோக காலத்தில் 51 சதவீதத்தால் 35,576 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தன. வளமாக்கிப் பயன்பாட்டின் வீழ்ச்சியானது பாதகமான, வானிலை நிலவரங்களினதும் விதைக்கப்பட்ட நிலப்பரப்பு குறைவடைந்தமையினதும் இணைந்த விளைவாகும். விதைக்கப்பட்ட எக்டேயரொன்றுக்கு பயன்படுத்தப்பட்ட வளமாக்கியின் சராசரி அளவு முன்னைய தொடர்பான காலங்களுடன் ஒப்பிடுகையில் பெரும்போகத்தில் 1 சதவீதத்தால் சிறிதளவாக அதிகரித்த வேளையில் 1987 சிறுபோகத்தில் 41 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. தேசிய வளமாக்கிச் செயலகத்தின்படி, ஒரு கலண்டர் ஆண்டின் அடிப்படையில் நெற்றுறைக்கான வளமாக்கி வழங்கல் 1987 இல் 215,036 மெற்றிக் தொன்களாக அமைந்து 1986 இன் வழங்கல்களைவிட 8 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது.

விரயங்களுக்கும், விதைநெல் தேவைகளுக்கும் சீராக்கம் செய்த பின்னர் 1987 இன் அரிசிக்குச் சமமான மொத்த நெல் உற்பத்தி 13 இலட்சம் மெற்றிக் தொன் அல்லது மதிப்பிடப்பட்ட மொத்த ஆண்டின் நுகர்வில் 80 சதவீதத்திற்கு வகை கூறியது. மீளாய்விற்குரிய ஆண்டுத் தொடக்கத்தில் 155,500 மெற்றிக் தொன்களைக் கொண்ட அரிசிக் கையிருப்பினைக் கொண்டிருந்த உணவு ஆணையாளர் திணைக்களம் இவ்வாண்டில் 102,416 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்தது.

உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் நெல் சந்தைப்படுத்தும் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல் 1987 இல் 63,868 மெற்றிக் தொன்களாக (31 இலட்சம் புசல்கள்)அமைந்து முன்னைய ஆண்டில் செய்யப்பட்ட கொள்வனவுகளுடன் ஒப்பிடுகையில் 58 சதவீதம் கொண்ட கணிசமானளவு வீழ்ச்சியினைக் காட்டியது. இது 1953 இற்குப் பின்னர் உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட ஆகக் குறைந்த மட்டக் கொள்வனவாகும். எவ்வாறெனினும், இவ்வாண்டில் நெற் சந்தைப்படுத்தும் சபையானது ஒன்று சேர்ந்த கையிருப்புக்களில் இருந்து உணவு ஆணையாளரின் அரிசித் தேவைகளை வழங்கக் கூடியதாக இருந்தது. கொள்வனவுகளில் ஏற்பட்ட கணிசமானளவு வீழ்ச்சிக்கு வரண்ட வலயத்தில் முக்கிய நெல் உற்பத்திப் பகுதிகளின் வரட்சிதால் பாதிப்புற்ற பகுதிகளிலான நன்கு குறைந்த கொள்வனவுகளே காரணமாகும். அனுராதபுரம், பொலநறுவை, திருகோணமலை, அம்பாறை, குருநாகல் போன்ற மாவட்டங்களி

விருந்தான ஒன்று சேர்ந்த கொள்வனவுகள் 1986 இன் மொத்தக் கொள்வனவில் 74 சதவீதமாக விளங்கி 1987 இல் 63 சதவீதத்தால் 41,669 மெற்றிக் தொன்களுக்கு (மொத்தக் கொள்வனவில் 65 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. இந்த வீழ்ச்சிக்குக் குறைவான நெல் உற்பத்தி, குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் நிலவிய குழப்ப நிலைமைகள், தனியார்துறையில் நெல் வர்த்தகர்களின் கூடிய தீவிரப் பங்களிப்பு போன்றவையே பெரிதும் காரணமாகும்.

ஆண்டு முழுவதும், நெல்லின் திறந்த சந்தை விலையானது, புசலுக்கு உத்தரவாத விலையான ரூ. 70.00 இனைவிட (1 கிலோகிருமுக்கு ரூ. 3.35) உயர்வானதாகக் காணப்பட்டது. ஆண்டுக்கான சராசரி திறந்த சந்தை விலையானது புசலொன்றிற்கு ரூ. 87.84 ஆக விருந்து (ஒரு கிலோகிருமுக்கு ரூ. 4.20) 1986 ஆம் ஆண்டின் விலையினை விட 4 சதவீதம் கூடுதலாக இருந்தது. சராசரி திறந்த சந்தை விலக்கும் உத்தரவாத விலைத்திட்ட விலக்கும் இடையிலான வேறுபாடு 1987 ஆம் ஆண்டின் முதலரைக் காலத்தில் புசலொன்றிற்கு ரூ. 16.09 இலிருந்து ஆண்டின் பின்னரைக் காலத்தில் ரூ. 19.59 இற்கு அதிகரித்தது. திறந்த சந்தை விலைகளின் அதிகரிக்கும் போக்கு பெரும்போகம், சிறுபோகம் இரண்டினதும் குறைவான உற்பத்தியின் காரணமாகச் சந்தையில் அரிசியின் குறைவாக கிடைக்கும் தன்மையை முக்கியமாகப் பிரதிபலித்தது. இதே போக்கினைத் தொடர்ந்து பச்சை அரிசி, நாட்டரிசி, சம்பா போன்ற அரிசி இனங்களின் திறந்த சந்தை விலைகளும் இவ்வாண்டில் அதிகரித்தன. சம்பா அரிசியின் விலை இவ்வாண்டில் கிலோகிரும் ஒன்றிற்கு ரூ. 10.29 இற்கும் ரூ. 11.90 இற்கும் இடையில் வேறுபட்டிருந்த வேளையில் நாட்டரிசியின் விலைகள் கிலோகிருமொன்றிற்கு ரூ. 7.11 இற்கும் ரூ. 8.12 இற்குமிடையில் வேறுபட்டிருந்தன. பச்சை அரிசியின் விலையானது கிலோகிருமொன்றிற்கு ரூ. 7.56 இற்கும் ரூ. 8.33 இற்கும் இடையில் தளம்பலுற்றிருந்தது.

1987 திசெம்பரில் 1979 இன் எண் 1 கொண்ட உள்நாட்டு வர்த்தக ஆணையாளர் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நெல் குற்றும் ஆலைச் சொந்தக்காரர்களுக்கும். அரிசி வர்த்தகர்களுக்கும் வழங்கியுள்ள அறிவித்தலின்படி பச்சை அரிசியினதும் நாட்டரிசியினதும், உற்பத்தி சந்தைப்படுத்தல் என்பன தொடர்பாகவும் இலங்கை தர நிர்ணயத்தினைக் கடைப்பிடிக்குமாறு கேட்கப்பட்டிருந்தனர். இதன்படி ஆலைச் சொந்தக்காரர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் அரிசியைச் சிறப்புத் தரம் 1, தரம் 11, தரம் 111, ஆகக் குறைந்த தரம் என்ற வகையில் வகைப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். நெல் சந்தைப்படுத்தும் சபையும் குற்றப்பட்ட, சந்தைப்படுத்தப்பட்ட அரிசியை, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்திற்கு இணங்கத் தர நிர்ணயப்படுத்தலை 1987 இறுதியில் தொடங்கியுள்ளது.

**சீனி**

மொத்தச் சீனி உற்பத்தி முன்னைய ஆண்டில் அறிவிக்கப்பட்ட உச்ச நிலையான 34,325 மெற்றிக் தொன்களிலிருந்து 1987 இல் 29,304 மெற்றிக் தொன்களுக்கு 15 சதவீதத்தால் கணிசமானளவுக்கு வீழ்ச்சியடைந்தது. இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனத்தின் சீனி உற்பத்தியானது 29 சதவீதத்தால் 15,035 மெற்றிக் தொன்களுக்குக் கணிசமாக வீழ்ச்சியடைந்தவேளையில் தனியார் துறையினது உற்பத்தி 9 சதவீதத்தால் உயர்வடைந்து 1986 இன் 13,116 மெற்றிக் தொன்களிலிருந்து 1987 இல் 14,269 மெற்றிக் தொன்களாக விளங்கியது.

இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனத்தின் குறைந்த உற்பத்திக்கு கந்தளாய் செவனகல தொழிற்சாலைகளின் குறைவான உற்பத்தி பெரிதும் காரணமாக அமைந்தது. கந்தளாய் தொழிற்சாலையின் உற்பத்தியானது 1987 இல் 66 சத வீதத்தால் 2,288 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தவேளையில் செவனகல தொழிற்சாலை 37 சதவீதத்தால் 4,107 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. எனினும் இங்குரான தொழிற்சாலையின் சீனி உற்பத்தியானது 1987 இல் 9 சதவீதத்தால் 8,640 தொன்களுக்கு அதிகரித்திருந்தது. இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சாலையின் மொத்தச் சீனி உற்பத்தியில் ஏற்பட்ட கூடியளவு வீழ்ச்சிக்கு முக்கியமாகக் கரும்பு பிழிவதற்கான வழங்கலைக் குறைத்ததுடன் கரும்பின் தரத்தையும் பாதித்த நீடித்த வரட்சி நிலைமைகளே காரணமாகும். கந்தளாய் அணைக்கட்டு உடைப்பெடுத்ததனுல் எற்பட்ட உற்பத்தி வீழ்ச்சி சாதகமற்ற வானிலை நிலைமைகளால் மேலும் மோசமடைந்தமையினுல் கந்தளாய் தொழிற்சாலையின் உற்பத்தி கடும் பின்னடைவைக் கொண்டிருந்தது. இனக் கலவரங்களும் கந்தளாய், இங்குரான உற்பத்திகளில் பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தன. கரும்புச் செய்கையின் கீழான பெரும் நிலப்பரப்பு பயங்கரவாத நடவடிக்கைகளினுலும் தொழிலாளர் குறைப்பினுலும் அறுவடை செய்யப்படாமல் விடப்பட்டுள்ளது. பெல்வத்தை சீனித் தொழிற்சாலையின் சீனி உற்பத்தியும் வரட்சியினுல் கடும் பாதிப்புக்குள்ளானதுடன் இத்தொழிற்சாலை 1987 இல் இலக்கிடப்பட்ட உற்பத்தியான 32,000 தொன்களுக்கு எதிராக 14,269 தொன்களை மட்டுமே உற்பத்தி செய்யக் கூடியதாக இருந்தது.

கரும்புச் செய்கைக்குட்பட்ட (முளை நாட்டுதல் உட்பட) மொத்த நிலப்பரப்பானது 1986 இன் 10,577 எக்டேயர்களிலிருந்து 1987 இல் 10,461 எக்டேயர்களுக்கு 1 சதவீதத்தால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. 1987 இல் கந்தளாய் தொழிற்சாலையில் கரும்பு உற்பத்தியின் கீழான நிலப்பரப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 49 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் 977 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியுற்றவேளையில் செவனகல தொழிற்சாலையினது நிலப்பரப்பு 7 சதவீதத்தால் 1,949 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. மாருக இங்குரான தொழிற்சாலையினுலும் பெல்வத்தை சீனிக் கூட்டு நிலையத்தினுலும் முகாமைப்படுத்தப்படும் கரும்புச் செய்கைக்குட்பட்ட நிலப்பரப்பு 1987 இல் முறையே 8 சதவீதத்தாலும், 19 சதவீதத்தாலும் 2,331 எக்டேயர்களுக்கும், 5,204 எக்டேயர்களுக்கும் அதிகரித்தது.

1987 இல் எல்லாச் சீனித் தொழிற்சாலைகளினதும் சராசரி சீனி பெறப்படும் வீதம் 1986 இன் 7.79 சதவீதத்திலிருந்து 1987 இல் 7.35 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதற்கு முக்கியமாகக் கரும்பில் சீனியின் அளவினைக் குறைவடையச் செய்த கடுமையானதும் நீண்ட காலம் நிலவியதுமான வரட்சி நிலைமைகள் காரணமாகும். கந்தளாய் தொழிற்சாலையில் சீனி பெறப்படும் வீதம் 1986 இன் 8.09 சதவீதத்திலிருந்து 1987 இல் 6.70 சதவீதத்திற்கு கணிசமானளவுக்கு வீழ்ச்சியடைந்தவேளையில் இங்குரான, செவனகல, பெல்வத்தை ஆகிய தொழிற்சாலைகளில் பெறப்படும் வீதம் முறையே 7.30 சதவீதத்திற்கும், 7.67 சதவீதத்திற்கும் 7.41 சதவீதத்திற்கும் வீழ்ச்சியுற்றன. 1987 இல் கந்தளாய் தொழிற்சாலையினுல் கொள்வனவு செய்யப்பட்ட கரும்பின் அளவில் 24 சதவீத வீழ்ச்சி காணப்பட்ட போதும் தனியார் பயிர்ச்செய்கையாளர்களிடமிருந்து தொழிற்சாலைகளினுல் கொள்வனவு செய்யப்பட்ட கரும்பின் மொத்தத் தொகை 27 சதவீதத்தால் 75,101 மெற்றிக் தொன்களாகக் கணிசமானளவு அதிகரித்தது.

இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனத்தின் சீனியின் உற்பத்திச் செலவு மீதான தரவுகள் கிடைக்கக்கூடியனவாகவில்லை. பெல்வத்தை சீனிக் கூட்டுநிலையத்தின் உற்பத்திச் செலவு 1986 இன் கிலோகிராம் ஒன்றுக்கு ரூ. 24.57 இலிருந்து 1987 இல் கிலோகிராம் ஒன்றுக்கு ரூ. 38.50 ஆக 57 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது. உற்பத்திச் செலவின் அதிகளவிலான உயர்வுக்கு, ரூபா பெறுமதி தொடர்ந்தும் வீழ்ச்சியடைவதுடன் வெளிநாட்டுக் கடன்கள் மீதான உயர்வான வட்டிக் கொடுப்பனவுகளும் பாதகமான காலநிலைமைகள் காரணமாக உற்பத்திகள் இலக்குகளைவிடக் குறைவானதாகவிருந்தமையும் ஓரளவிற்குக் காரணமாகும். சீனியின் திறந்த சந்தை விலைகளுக்கும் உற்பத்திச் செலவுக்கும் இடையேயான வேறுபாட்டை அரசு ஈடுசெய்ய வேண்டி உள்ளதால் பெல்வத்தைச் சீனிக் கூட்டுநிலையத்தின் செலவு உயர்வடைந்தமை கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும்.

1987 இல் சீனி இறக்குமதி, பகிர்ந்தளித்தல் என்பன தொடர்பான ஏற்பாடுகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஒன்று காணப்பட்டது. 1987 ஏப்பிறல் 1 இலிருந்து சீனி தொடர்பான விடயங்களை உணவுக் கட்டுப்பாட்டாளர் கையாள்வதை நிறுத்திக் கொண்டார். இதுவரை காலமும் உணவுக் கட்டுப்பாட்டாளரினால் பொறுப்பேற்கப்பட்ட சீனியின் தாங்கிருப்பு வைத்திருத்தல் ஈ.டி. அன்ட் எவ். மான் சீனி எனப்படும் பன்னாட்டு வர்த்தகக் கூட்டு நிலையம் ஒன்றிடம் கையளிக்கப்பட்டுள்ளது. திருத்தியமைக்கப்பட்ட ஏற்பாட்டின் கீழ் உணவுக் கட்டுப்பாட்டாளரால் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட சீனியைக் கொள்வனவு செய்தல், பகிர்ந்தளிப்பதற்காகச் சீனியை இறக்குமதி செய்தல், தாங்கிருப்புக்களைப் பேணல் போன்றவற்றினை இனிமேல் மேற்கொள்ள வேண்டியதில்லை. இறக்குமதிகள் மூலமாகவோ அல்லது உள்நாட்டுச் சந்தைகளிலோ சீனியினைக் கொள்வனவு செய்தல் தனியார்துறையிலேயே முழுமையாகக் கையாளப்பட்டது. தனியார்துறை இறக்குமதியாளர்களும் கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனமும் பெல்வத்தை சீனிக் கூட்டுநிலையத்தினால் உற்பத்தி செய்யப்படும் சீனியை ஏற்றுக் கொள்ளப்பட்ட விலையில் கொள்வனவு செய்யுமாறு கேட்கப்பட்டனர்.

**சிறு உணவுப் பயிர்கள்**

உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம் போன்ற சில பயிர்களைத் தவிர பெரும்பாலான சிறு உணவுப் பயிர்கள் சேனைப் பயிர்ச்செய்கையாக அல்லது வீட்டுத் தோட்டங்களில் கலப்புப் பயிர்களாக வளர்க்கப்படுகின்றன. எனவே இப்பயிர்த்துறைமீது கிடைக்கத்தக்க தரவுகள் பல்வேறு குறைபாடுகளினால் பாதிக்கப்படுவதோடு இவ்வகைத் தரவுகளில் பெரும்பாலானவை செப்பமற்ற மதிப்பீடுகளாகவும் உள்ளன.

வேளாண்மை அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சினால் வழங்கப்பட்ட தற்காலிகத் தரவுகளின்படி பல சிறு உணவுப் பயிர்களின் உற்பத்தி 1987 இல் அதிகரித்தது. 1987 பயிர்ச்செய்கையாண்டில் உழுந்து, பயறு, தட்டைப்பயறு, சோளம், எள்ளு, சின்ன வெங்காயம் ஆகிய பயிர்கள் கூடியளவு பரப்பளவில் செய்கை பண்ணப்பட்டமையால் அவற்றின் உற்பத்தியில் கணிசமான அதிகரிப்பைப் பதிவு செய்தன. சிலவேளைகளில் இவ்வாண்டில் நெல் பயிர்ச்செய்கையை மிகவும் பாதிப்படையச் செய்த வரட்சி நிலைமைகள் பல உலர்வலய வேளாண்மையாளர்களைச் சிறு உணவுப் பயிர்களுக்கு மாற்றும்படியும் வருவாயினதும் உணவுப் பாதுகாப்பினதும் குறைந்த மட்டம் ஒன்றினை உறுதிப்படுத்துவதற்காக இப்பயிர்ச்செய்கையின் கீழுள்ள பரப்பளவை அதிகரிக்கும்படியும் கட்டாயப்படுத்தியிருக்கலாம்.

உயர்ந்த பெறுமதியுள்ள சிறு உணவுப் பயிர்கள் வகையில் சின்ன வெங்காயம் மட்டும் உற்பத்தியில் அதிகரிப்பைப் பதிவுசெய்த வேளையில் உருளைக் கிழங்கு, மிளகாய், பம்பாய் வெங்காயம் ஆகியவற்றின் உற்பத்திகள் வீழ்ச்சியடைந்தன. மிளகாய்ப் பயிர்ச்செய்கை வரட்சி நிலைமையால் மிகவும் பாதிப்படைந்து இவ் வாண்டில் 39 சதவீதமான கணிசமான வீழ்ச்சிக்கு வழிவகுத்தது,.

1986/87 பெரும்போக காலத்தில் சின்ன வெங்காயம், பயறு, தட்டைப் பயறு, உழுந்து, சோளம் ஆகியவற்றின் உற்பத்தி கணிசமானளவு அதிகரித்தது. இப்பயிர்களில் பெரும்பாலானவை 1987 சிறுபோகத்திலும் கணிசமான அதிகரிப் புக்களைப் பதிவு செய்தன. சிறுபோகத்தில் தட்டைப் பயறு உற்பத்தி 60 சதவீதத் தால் அதிகரித்தவேளையில் உழுந்தின் உற்பத்தி மும்மடங்கிற்கும் கூடுதலான அதிகரிப்பைப் பதிவு செய்தது. சோயா அவரை உற்பத்தி பெரும்போகத்தில் 3 சதவீதத்தாலும், சிறுபோகத்தில் 24 சதவீதத்தாலும் இரு போகங்களிலும் வீழ்ச்சியடைந்தது.

சிறு உணவுப் பயிர்கள் துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1987 இல் 6 சதவீதத்தால் 20,207 மெற்றிக் தொன்களாக அதிகரித்தன.

நெல் சந்தைப்படுத்தல் சபையினால் தெரிந்தெடுக்கப்பட்ட எட்டுச் சிறு உணவுப் பயிர்களுக்காகத் தொழிற்படுத்தப்பட்ட கீழ்மட்ட விலைத்திட்டம் இவ் வாண்டிலும் தொடர்ந்து நடைமுறையில் இருந்தது. நிலக்கடலை, எள்ளு, உழுந்து ஆகியவற்றிற்கான கீழ்மட்ட விலைகள் 1987 சனவரியில் அதிகரிக்கப்பட்டன. நிலக்கடலையின் கீழ்மட்ட விலை கிலோகிருமொன்றிற்கு ரூ. 0.75 சதத்தினால் கிலோக்கிரும் ரூ. 7.00 இற்கு அதிகரிக்கப்பட்டவேளையில் உழுந்தின் விலையானது கிலோக்கிரும் ரூ. 6.00 ஆக உயர்த்தப்பட்டது. வெள்ளை எள்ளினதும் கறுப்பு எள்ளினதும் விலைகள் முறையே கிலோக்கிரும் ஒன்று ரூ. 9.00 இற்கும், ரூ. 7.50 இற்கும் உயர்த்தப்பட்டன. கீழ்மட்ட விலைத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் நெல் சந்தைப்படுத்தும் சபை 6,880 மெற்றிக் தொன் சோளத்தினைக் கொள்வனவு செய்தது. இத்திட்டத்தின் கீழ் சோயா அவரையின் கொள்வனவு 1987 இல் 66 சதவீதத்தால் அல்லது 281 மெற்றிக் தொன்களால் 705 மெற்றிக் தொன் களுக்கு அதிகரித்தது. இவ்வாண்டில் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் கொள் வன்வு செய்யப்பட்ட தட்டைப் பயறு, பயறு, எள்ளு, குரக்கன் முன்னைய ஆண்டு களைப் போன்று சிறிதளவானதாகவே விளங்கின.

சிறு உணவுப் பயிர்த்துறை கணிசமானளவு அபிவிருத்தி ஆற்றலைக் கொண் டிருந்தபோதிலும் இத்துறையில் அபிவிருத்தி மீது பல கட்டுப்பாடுகள் இருப்ப தாகத் தோன்றுகிறது. இவை சார்பு ரீதியில் குறைந்த மட்டத்திலான நிறுவன ஆதரவு, வேறுபட்ட வேளாண்மைச் சூழலைக் கொண்ட பகுதிகளுக்கும் பொருத்த மான உயர் விளைச்சலைத் தரக்கூடிய வகைகளின் கிடைக்கும் தன்மை வரையறுக்கப் பட்டிருந்தமை சந்தைப்படுத்தல் பிரச்சினைகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளனர். ஓரளவுக்கு இக்காரணிகளின் விளைவால் பல வேளாண்மையாளர்கள் இன்னமும் நெல் பயிர்ச்செய்கைக்குக் கூடியளவு முன்னுரிமையினைக் காட்டுவதாகத் தோன்று கிறது. நெல் பயிர்ச்செய்கையில் தன்னிறைவினை நோக்கிச் சென்று கொண்டிருப் பதால் வேளாண்மைத்துறையில் கூடியளவு சமநிலைப்படுத்தப்பட்ட வளர்ச்சியினை அடைவதற்குக் கொள்கை வழிமுறைகள் மூலமாக இம் முன்னுரிமைத் தன்மையை மாற்றுவது அவசியமாகும்.

**மீனும் கால்நடையும்**

1987 இல் மீன் உற்பத்தி 190,002 மெற்றிக் தொன்களாகத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டதோடு இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4 சதவீதமான அதிகரிப்பினைக் காட்டியது. மொத்த உற்பத்தியில் 29 சதவீதத்திற்கு வகைகூறும் கரையோர மீன்பிடி உற்பத்தி 3 சதவீதத்தால் 1986 இன் 144,266 மெற்றிக் தொன்களிலிருந்து 1987 இல் ரூ. 149,278 மெற்றிக் தொன்களாக அதிகரித்தது. மொத்த மீன் உற்பத்தியில் ஏறத்தாள 2 சதவீதமான மிகவும் சிறிய பங்கிற்கு வகை கூறும் கரைகடந்த ஆழ் கடல் மீன் உற்பத்தி கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1987 இல் 25 சதவீதத்தால் உயர்வடைந்தது. இதேவேளை உள்நாட்டு மீன்பிடித்துறை 3 சதவீதமான சிறு அதிகரிப்பைப் பதிவு செய்து 36,465 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. தனியார்துறை மொத்த மீன் உற்பத்தியில் முதன்மைப் பங்காளராகத் தொடர்ந்தும் விளங்கியது. மீன்பிடிக் கூட்டுத்தாபனம் தனியார்துறையிலிருந்து மீனைக் கொள்வனவு செய்வதில் பெருமளவுக்கு அக்கறை கொண்டிருந்தது.

வெளிநாட்டு மூலவளங்களால் நிதியிடப்பட்ட பல சிறப்பு மீன்பிடி அபி விருத்திச் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தல் 1987 இல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. இவை வடமேற்குக் கரையோர மீன்படி அபிவிருத்திச் செயற்றிட்டம், கிழக்குக் கரை மீன்பிடி அபிவிருத்திச் செயற்றிட்டம், மேற்குக் கரை ஒருங்கிணைக்கப்பட்ட மீன்பிடி செயற்றிட்டம், இலங்கை மீன் வளர்ப்பு அபிவிருத்தி செயற்றிட்டம் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. வடக்கு மேற்குக் கரையோர மீன்பிடி அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் இவ்வாண்டில் 80 (34 அடி) படகுகள் கட்டப்பட்டு வர்த்தக மீன்பிடிக்காக வழங்கப்பட்டன. கிழகுக்கரை மீன்பிடி அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் 20 படகுகளின் கட்டுமான வேலைகள் 1987 இல் நிறைவு செய்யப்பட்டன. 1987 இல் மேற்குக் கரை ஒருங்கிணைக்கப்பட்ட மீன்பிடிச் செயற்றிட்டத்தின் கடன் முடிவடையும் திகதி ஆசிய அபிவிருத்தி வங்கியால் மேலும் 1988 ஏப்பிரல் வரை நீடிக்கப்பட்டது அம்பாந்தோட்டை ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மீன்பிடி அபிவிருத்திக் கூறின் கட்டம் 1 இவ்வாண்டில் முடிக்கப்பட்டது. புத்தளம் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வெள்ளை மண் கரையில் படகுகளை கரை சேர்க்கும் ஏற்பாடுகளினதும் கல்பிட்டியில் மீன்பிடிப் பணிகள் நிலையத்தினதும் கட்டுமான வேலைகள் 1987 இல் முடிக்கப் பட்டன.

1987 இல் பல உதவித் திட்டங்களின் நடைமுறைப்படுத்தலும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. 1987 இல் கடல், உள்நாட்டு மீன்பிடித்துறைகளுக்கான வேறுபட்ட உதவித் திட்டங்களின் கீழ்ப் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தத் தொகை முறையே ரூ. 270 இலட்சமாகவும், ரூ. 10 இலட்சமாகவும் விளங்கியது. குள உதவித்திட்டத்தின் கீழ் ஏறக்குறைய 5 எக்டேயர்கள் குள மீன் வளர்ப்பின் கீழ்க் கொண்டுவரப்பட்டதோடு ரூ. 949,700 உதவுதொகையாக வழங்கப்பட்டது. வெவ்வேறு உதவித் திட்டங்களின் கீழ் 1987 இல் மீன்பிடித்துறைக்கு 379 படகுகள், 266 மரபு ரீதியான கலங்கள், 890 படகு இயந்திரங்கள், 76 கப்பல் உடற்பகுதி போன்றவையும் வழங்கப்பட்டன.

இவ்வாண்டில் மீன்பிடிக் கூட்டுறவுத்துறையின் முக்கிய அபிவிருத்திகளில் ஒன்று மீனவர்களுக்கு உதவிகளை வழங்குவதற்காகச் சுவீடன்—இலங்கை கூட்டுறவு அபிவிருத்தி செயற்றிட்டத்தினைத் தொடங்கியமையாகும். இது சுவீடன் கூட்டுறவு நிலையத்தினால் நிதியிடப்பட்டு இலங்கை கூட்டுறவு கூட்டமைப்பினால் நடாத்தப் படுகிறது.

பொதுவாகப் பார்க்கையில் மீன்பிடித்துறையின் செயலாற்றம் எதிர்பார்ப் பிற்கும் மிகவும் குறைவாகவே விளங்கியது. பங்கீட்டுப் பிரச்சினைகள், உயர்ந்த எரிபொருள் செலவு, மீன்களைப் பாதுகாப்பதற்கான உயர்ந்த செலவு, மீனின் நிரம்பல் போதாமை போன்ற காரணிகள் ஒன்று சேர்ந்து இவ்வாண்டில் மீனின் விலையேற்றத்திற்கு வழிவகுத்தன. உயர்ந்த விலைகளின் நன்மைகள் மீனவர்களின் மட்டத்தைச் சென்றடையாமையால் நுகர்வோர் விலைகளைத் தொடர்ந்தும் அதி கரிக்கையில் நாட்டிலுள்ள பெரும்பான்மையான மீனவர்கள் பொருளாதார ரீதி யாகப் பாதிப்படைந்தவர்களாக வறுமையில் வாழ்கிறார்கள். எனவே உற்பத்தியை அதிகரிப்பதற்கு முயற்சியெடுக்கப்படும்வேளையில் இம்முயற்சிகளின் நன்மைகள் உற் பத்தியாளர்களைக் கூடியளவு அடைவதை உறுதிப்படுத்துவதற்காக நன்மைகளின் பகிர்ந்தளிப்பில் பெருமளவு கவனம் செலுத்தப்பட வேண்டும். இது தொடர்பாகப் பல ஆண்டுகளாகத் தொழிற்பாட்டிலிருக்கும் வெவ்வேறு உதவித்திட்டங்களை அவை சார்பு ரீதியாகக் குறைந்த சமூக பொருளாதார நிலையுள்ள மீனவர்களுக்கு எந்தளவில் நன்மையளித்துள்ளன என்பதை மதிப்பிடும் வகையில் அவற்றைக் கணிப்பீடு செய்வதற்கான அவசர தேவையொன்று உள்ளது.

குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளின்படி பால் உற்பத்தி (எருமைப்பால் உட்பட) முன்னைய ஆண்டில் உற்பத்தி செய்யப் பட்ட 1,780 இலட்சம் இலீற்றர்களுடன் ஒப்பிடுகையில் 1987 இல் 2,750 இலட்சம் இலீற்றர்களாக விளங்கி 54 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. வரை யறுக்கப்பட்ட இலங்கை பால் கைத்தொழில்கள் (மில்க்கோ) 1987 இல் 690 இலட்சம் இலீற்றர் பாலைச் சேகரித்தது. இது 1986 இல் தேசிய பாற்சபையினாலும் (1986 சனவரி—யூலை) மில்க்கோவினாலும் (1986 ஓகத்து—திசெம்பர்) இணைந்து சேகரித்த தொகையினைவிடச் சிறிதளவு கூடியதாகும்.

கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள விலங்கு பாது காப்பு நலத்துறை திணைக்களமும், தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையும் இனப்பெருக்கப் பணிகளுக்கு வசதிகள் செய்தல், தொற்றுநோய்க் கெதிரான தடுப்பூசி பாதுகாப்பு வழங்குதல் போன்ற அவற்றின் உதவி நிகழ்ச்சித் திட்டங்களை தொடர்ந்தும் மேற்கொண்டன. காலநடைத் துறையை அபிவிருத்தி செய்வதற் கான பலவகைச் சிறப்புச் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தல் 1987 இலும் தொடர்ந்து நடந்தன. இச்செயற்றிட்டங்கள் இலங்கை/சேர்மனி ஆடு அபிவிருத்திச் செயற்றிட்டம், இலங்கை—சுவிஸ் கால்நடை அபிவிருத்திச் செயற் றிட்டம் குருநாகல் மாவட்ட கால்நடை அபிவிருத்திச் செயற்றிட்டம் அனுராத புர மாவட்டப் பிரதேச வேளாண்மைச் செயற்றிட்டம், இலங்கை—ஆசிய அபி விருத்தி வங்கி கால்நடை அபிவிருத்திச் செயற்றிட்டம் என்பனவற்றை உள்ளடக்கி யிருந்தன.

குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் 1987 இல் முட்டை உற்பத்தியை 8,150 இலட்சங்களெனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டினை விட 22 சதவீதமான அதிகரிப்பாகும். மத்திய வங்கியின் மீள்நிதியிடல்

திட்டங்களின் கீழ் சலுகை வட்டி வீதங்களில் நிறுவன ரீதியிலான நிதிகள் கூடியளவில் கிடைக்கத்தக்கதாக இருந்தமை கோழிப்பண்ணைத் துறையில் சாதக மான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

**கிராமியக் கொடுகடன்**

கிராமியத்துறைக்கான நிறுவன ரீதியான கொடுகடன் பல வங்கித்தொழில் நிறுவனங்களினால் வழங்கப்படுகிறது. இந்நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கிரா மியக் கொடுகடன் குறுங்காலப் பயிர்ச்செய்கைக் கடன்களையும், பரந்தளவு பொருளாதார நடவடிக்கைகளுக்கான நடுத்தர, நீண்டகாலக் கடன்களையும் உள்ளடக்கியிருந்தது. எனினும் அறிக்கையின் இப்பிரிவு புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வங்கிகளினால் நெல் மற்றும் ஏனைய உணவுப் பயிர்களின் பயிர்ச்செய்கைக்காக வழங்கப்பட்ட கடன்களை மட்டுமே ஆராய்கின்றது. பல்வேறுபட்ட நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் உள்ளடக்கப்படாமைக்குக் கிராமியத் துறைக்குச் சென்றுள்ள அத்தகைய கடன்கள் எவ்வளவு என்பதைத் தீர்மானிப் பதற்குத் தரவுகளைப் பிரிப்பதில் உள்ள இடர்ப்பாடுகளே காரணமாகும். நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் திட்டங்களின் விபரங்கள் இவ்வறிக்கையின் பகுதி 11 இல் ஆராயப்பட்டுள்ளன.

1987 இல் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம், தொடர்பான வங்கிக் கிளையின் முகாமையாளரது தற்றுணிவின்படி ஏனைய இரு வேளாண்மையாளர்களின் உத்தரவாதமின்றிக் கடன்பாட்டாளர் களுக்குக் கடன் வழங்குவதனைப் பங்குபற்றும் வங்கிகளுக்கு இயலச் செய்வதற்காகத் திருத்தப்பட்டது. மேலும், இத்திட்டத்தின் கீழ்த் தொடக்கத்தில் ஒரு பயிர்ச்செய் கைப் பருவகாலத்திற்காக வழங்கப்பட்ட கடன்களுக்கே கட்டுப்படுத்தப்பட்டிருந்த முன்னர் செலுத்தப்படாத கடன்களின் மீள் அட்டவணையிடல் 1987இல் இரு பருவ காலக் கடன்களை உள்ளடக்கத்தக்க விதத்தில் விரிவாக்கப்பட்டது. அத்துடன் மத்திய வங்கி, இலங்கை வர்த்தக வங்கியையும் இத்திட்டத்தில் பங்குபற்றுமொரு வங்கியாக அங்கீகரித்தது. புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடு கடன் திட்டத்தில் பங்குபற்றுவதற்காக மத்திய வங்கியுடன் பதிவு செய்து கொண்ட சிக்கன மற்றும் கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 1986 இன் 22 இலிருந்து 1987 இல் 29 இற்கு அதிகரித்தது. எனினும் கடந்த காலத்தினைப்போன்றே இரு அரசுடமை வங்கிகளான இலங்கை வங்கியும், மக்கள் வங்கியுமே இத்திட்டத்தின் கீழான கொடுகடனின் முக்கிய மூலங்களாகத் தொடர்ந் தும் விளங்கின.

அட்டவணை 1.14 இல் காட்டப்பட்டவாறு புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் 1987 பயிர்ச்செய்கையாண்டில் வழங்கப் பட்ட கடன்களின் மொத்தத் தொகை ரூ. 3,300 இலட்சமாக விளங்கி முன்னைய பயிர்ச்செய்கையாண்டில் வழங்கப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில் 13 சத வீதங் கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. இவ்வதிகரிப்பிற்கு 1986 சிறு போகம் வரை நடைமுறைப்படுத்தப்பட்ட அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் திருத்தியமைக்கப்பட்டதன் மூலம் பங்குபற்றிய அனைத்து வங்கிகளாலும் கூடுதலான கொடுகடனைப் பகிர்ந்தளிப்பதற்குப் பெருமளவு முய ற்சிகள் மேற்கொள்ளப்பட்டமையும் ஓரளவுக்குக் காரணமாகக் கருதப்படலாம். 1986 சிறுபோகத்திலிருந்தும் மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட கொடு

கடன் உத்தரவாதத் திட்டமும் இவ்வதிகரிப்பில் தாக்கத்தினைக் கொண்டிருக்கக் கூடும். 1987 இல் கொடுகடன் அளவில் ஏற்பட்ட அதிகரிப்பு பெரும்போகத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் இது சிறுபோகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியையும் மிகக் கூடுதலாக ஈடு செய்தது.

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் 1986/87 பெரும்போகத்திற்காக அனைத்து பங்குபற்றும் வங்கிகளும் சேர்ந்து வழங்கிய மொத்தத் தொகை ரூ. 2,210 இலட்சமாக விளங்கி அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் முன்னைய ஆண்டில் இதே பருவ காலத்தில் வழங்கப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில் 84 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. இப்பருவகாலத்தில் வழங்கப்பட்ட கடனில் 91 சத வீதத்திற்கு இலங்கை வங்கியும் (43 சதவீதம்), மக்கள் வங்கியும் (48 சதவீதம்) வகை கூறின. கடந்த காலங்களைப்போன்றே கடனின் பெருந்தொகையானது (ஏறத்தாள 82 சதவீதம்) நெல் செய்கைக்கானதாக இருந்தது. மக்கள் வங்கியும், இலங்கை வங்கியும் அவற்றின் நெற் கடனில் கணிசமானளவு அதிகரிப்பினைப் பதிவு செய்தன. 1986/87 பெரும்போகத்தில் மக்கள் வங்கி நெற்கடனின் மொத்த அளவில் 52 சதவீதத்தினை வழங்கியவேளையில் இலங்கை வங்கி 40 சத வீதத்தினை வழங்கியது. அட்டன் நசனல் வங்கியின் பங்கு 7 சதவீதமாக இருந்தது. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் 3 சதவீதத்திற்கு வகை கூறின.

1986/87 பெரும்போகத்தில் ஏனைய பயிர்களுடன் மிளகாய், உருளைக் கிழங்கு, வெங்காயம் என்பவற்றை உள்ளடக்கிய சிறு உணவுப் பயிர்களுக்காக வழங்கப்பட்ட கடன்கள் ரூ. 380 இலட்சமாக விளங்கிக் கடந்த ஆண்டின் இதே பருவகாலத்தில் வழங்கப்பட்ட கடன்களைவிட இரு மடங்கு அதிகரிப்பினைக் காட்டின. இலங்கை வங்கி இக்கடன் வழங்கலில் 60 சதவீதத்திற்கு வகை கூறியவேளை யில் மக்கள் வங்கி 32 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. சிறு உணவுப் பயிர் களுக்கான ஒவ்வொரு வங்கியினதும் கடன் வழங்கல்கள் இரு மடங்கு அதிகரிப் பினைக் காட்டின.

பெரும்போக காலத்தில் கொடுகடன் அளவில் காட்டப்பட்ட குறிப்பிடத் தக்க அதிகரிப்பிற்கு மாறாக, 1987 சிறுபோகத்தில் வழங்கப்பட்ட கொடுகடன் தொகையில் மிகக் கூடியளவு வீழ்ச்சி ஏற்பட்டது. சிறுபோகத்தில் வழங்கப்பட்ட கடன்கள் ரூ. 1,090 இலட்சமாக விளங்கிக் கடந்த ஆண்டின் இதே பருவ காலத்தினைவிட 33 சதவீத வீழ்ச்சியைக் காட்டின. சிறு உணவுப் பயிர்களுக்காக வழங்கப்பட்ட கடன் தொகையில் ஏற்பட்ட மிகக் கூடியளவு குறைப்பே (59 சத வீதம்) இவ்வீழ்ச்சி முழுவதற்கும் காரணமாகும். முக்கிய உற்பத்திப் பிரதேசங் களின் நீண்ட கடுமையான வரட்சி நிலைமைகளும் இவ்வீழ்ச்சியின்மீது தாக்கத் தினைக் கொண்டிருந்தன. சிறு உணவுப் பயிர்க் கடன்களினது வங்கிகளின் படியான பகிர்ந்தளிப்பு மீதான தரவு, சிறு உணவுப் பயிர்க் கடன்களின் மொத்த அளவில் ஏற் ட்ட தொகையான வீழ்ச்சியின் காரணமாக 1987 சிறுபோகத்தில் மக்கள் வங்கியினால் வழங்கப்பட்ட கடன் முன்னைய சிறுபோகத்தில் வழங்கப்பட்ட ரூ. 510 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 140 இலட்சமாக மட்டும் இருந்தமையைக் காட்டியது.

1987 சிறுபோகத்தில் நெற்செய்கைக்காக வழங்கப்பட்ட கடன்கள் கடந்த ஆண்டின் இதே பருவகாலத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 791 இலட்சத்திற்கு 11 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இரு அரசுடமை வங்கிகளான இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் இணைந்து பருவகால நெற்கடன்களில் 97 சத வீதத்திற்கு வகை கூறின. முன்னைய ஆண்டின் இதே பருவகாலத்துடன் ஒப்பிடுகை யில் 1987 சிறுபோகத்திற்காக வழங்கப்பட்ட நெற்கடன் தொகையில் மக்கள் வங்கி 27 சதவீத வீழ்ச்சியை அறிவித்தவேளையில் இலங்கை வங்கி 23 சதவீத அதிகரிப்பினை அறிவித்தது.

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் 1987 பயிர்ச்செய்கையாண்டில் வழங்கப்பட்ட கடன்களின் மொத்தத் தொகையில் மக்கள் வங்கி 49 சதவீதத்திற்கும், இலங்கை வங்கி 45 சதவீதத்திற்கும் வகை கூறின. முன்னைய பயிர்ச்செய்கையாண்டில் இவற்றின் தொடர்பான பங்குகள் முறையே 55 சதவீதமாகவும், 35 சதவீதமாகவும் இருந்தன. குறுங்காலப் பயிர்ச்செய்கைக் கடன்களின் மிக முக்கிய மூலமாக மக்கள் வங்கி இன்னமும் இருந்தபோதும் அதன் சார்பு ரீதியான நிலை 1987 இல் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது. மாறாக 1987 பயிர்ச்செய்கையாண்டில் அத்தகைய கடன்களின் மொத்த அளவினை 47 சதவீதத்தினால் அதிகரித்த இலங்கை வங்கி அதன் சார்பு ரீதியான நிலையினைக் குறிப்பிட க்களவில் முன்னேற்றிக் கொண்டது. எனினும் பொதுவாகப் பார்க்கையில் கடந்த காலங்களைப் போன்றே, வங்கித்தொழில் துறை வேளாண்மையாளர்களுக்கான கொடுகடன் தேவையில் மிகச் சிறிதளவு பங்கினை மட்டுமே தொடர்ந்தும் வழங்கியது. 1986/87 பெரும்போகத்தில் 34,480 நெற் கடன்கள் வழங்கப்பட்டவேளையில் 1987 சிறுபோகத்தில் 15,374 கடன்கள் மட்டுமே வழங்கப்பட்டன.

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் 1986/87 பெரும்போகம், 1987 சிறுபோகம் இரண்டிலும் பெருமளவிலான கடன்பாட்டாளர்கள் குடியேற்றக்காரர்களாக விளங்கித் தொடர்பான பருவ காலங்களின் கடன்பாட்டாளர்களின் மொத்த எண்ணிக்கையில் 50 சதவீதத் திற்கும், 59 சதவீதத்திற்கும் வகை கூறியமையை உடமை வகைகளின்படியான கடன்பாட்டாளர்களின் பகுப்பாய்வொன்று எடுத்துக் காட்டியது. 1986/87 பெரும்போக காலத்தில் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ்க் கொடுகடன் வழங்கப்பட்ட மொத்த நிலப்பரப்பான 95,620 ஏக்கர்களில் 76 சதவீதம் முக்கிய நீர்ப்பாசனத் திட்டங்களிலும், 11 சத வீதம் சிறு நீர்ப்பாசனத் திட்டங்களிலும், 13 சதவீதம் மழை நீரை நம்பிய பயிர்ச் செய்கையின் கீழும் காணப்பட்டன. 1987 சிறுபோகத்திற்காக வழங்கப்பட்ட கடன்களும் அதே தன்மையைப் பின்பற்றி முதன்மை நீர்ப்பாசனத் திட்டங்கள் 79 சதவீதமான நிலப்பரப்பிற்கும் சிறு நீர்ப்பாசன பிரதேசங்கள் 9 சதவீத நிலப்பரப்பிற்கும் மழை நீரை நம்பிய பிரதேசங்கள் 12 சதவீத நிலப்பரப்பிற்கும் வகை கூறின.

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின்கீழ்

(1987 திசெம்பர் 31 ஆம்

| காலம் | மக்கள் வங்கி | | | இலங்கை வங்கி | | | அட்டன் நசனல் (இ) வங்கி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | மொத்தம் |
| 1985/86 பெரும்போகம் ... | 44.7 | 5.2 | 49.9 | 43.2 | 11.2 | 54.4 | 12.7 | 2.9 | 15.6 |
| 1986 சிறுபோகம் | 53.3 | 51.1 | 104.4 | 30.4 | 13.2 | 43.6 | 4.8 | 7.5 | 12.3 |
| பயிர்ச்செய்கை ஆண்டு 1986 ... | 98.0 | 56.3 | 154.3 | 73.6 | 24.4 | 98.0 | 17.5 | 10.4 | 27.9 |
| 1986/87 பெரும் போகம் | 94.8 | 12.2 | 107.0 | 72.4 | 22.8 | 95.2 | 12.5 | 3.1 | 15.6 |
| 1987 சிறு போகம் | 39.1 | 13.9 | 53.0 | 37.3 | 11.9 | 49.2 | 0.5 | 3.4 | 3.9 |
| 1987(ஆ) பயிர்ச்செய்கை ஆண்டு | 133.9 | 26.1 | 160.0 | 109.7 | 34.7 | 144.4 | 13.0 | 6.5 | 19.5 |

(அ) வங்கிகளினால் வழங்கப்பட்ட தொகை.

(ஆ) தற்காலிகமானவை.

(இ) அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் / புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்திற்கு வெளியே அட்டன் நசனல் வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களையும் உள்ளடக்கும்.

அட்டவணை 1.14

**பயிர்செய்கைக்கு வழங்கப்பட்ட கொடுகடன்கள் (அ)**

*நாளில் உள்ளவாறு நிலைமை)*

ப. இ. ரூபாய்களில்

| இந்தியன் ஓவசீஸ் வங்கி | | | பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | | | மொத்தக் கடன்கள் | | பு.அ.உ.கி.கொ.திட்டத்தின்கீழும் அ.உ.கி.கொ. திட்டத்தின் கீழும் வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள். |
|---|---|---|---|---|---|---|---|---|
| நெல் | சிறு உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | |
| — | — | — | 0.1 | — | 0.1 | 100.7 | 19.3 | 120.0 |
| 0.2 | — | 0.2 | 0.7 | — | 0.7 | 89.4 | 71.8 | 161.2 |
| 0.2 | — | 0.2 | 0.8 | — | 0.8 | 190.1 | 91.1 | 281.2 |
| 0.3 | — | 0.3 | 2.9 | 0.1 | 3.0 | 182.9 | 38.2 | 221.1 |
| — | — | — | 2.2 | 0.2 | 2.4 | 79.1 | 29.4 | 108.5 |
| 0.3 | — | 0.3 | 5.1 | 0.3 | 5.4 | 262.0 | 67.6 | 329.6 |

மூலங்கள்: மக்கள் வங்கி.
இலங்கை வங்கி.
அட்டன் நசனல் வங்கி
இந்தியன் ஓவசீஸ் வங்கி.
பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்.

1987 இல் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் மீள் அட்டவணையிடல் வசதி இயற்கை அழிவுகளினால் விவசாய நடவடிக்கைகள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கும் விரிவாக்கப்பட்டது. 1986/87 பெரும்போகத்தில் செலுத்தத் தவறிய கடன்களில் ஏறத்தாள ரூ. 70 இலட்சங்களைக் கொண்ட 1,920 கடன்கள் மீள அட்டவணையிடப்பட்டன. 1986 சிறுபோகத்தில் செலுத்தத் தவறிய கடன்கள் தொடர்பாக 1987 இல் கொடுகடன் உத்தரவாதம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டது. ரூ. 120 இலட்சங் கொண்ட மொத்தக் கோரல்களில் ரூ. 60 இலட்சம் கோரலின் முதல் தவணைப் பணமாகக் கடன் வழங்கும் வங்கிகளுக்குச் செலுத்தப்பட்டது. 1986/87 பெரும்போகத்தில் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடனுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதத்தின் கீழ் மத்திய வங்கியின் மொத்த இடர்க்காப்பு ரூ. 1,280 இலட்சமாகவும், சேகரிக்கப்பட்ட கட்டணம் ரூ. 13 இலட்சமாகவும் விளங்கியது. 1987 சிறுபோகத்தில் இது தொடர்பான எண் தொகை முறையே ரூ. 620 இலட்சமாகவும், ரூ. 6 இலட்சமாகவும் காணப்பட்டது.